# முன்னேற்ற அறிக்கை

# 2025



கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு



கௌரவ உபாலி பன்னிலகே,
கௌரவ அமைச்சர்
சமூக அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு



வசந்த பியதிஸ்ஸ,
கௌரவ பிரதி அமைச்சர்
சமூக அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு



சம்பத் மந்ரனாயக்க,
செலாளர்,
சமூக அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

# பொருளடக்கம்


| | விவரம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01 | அறிமுகம், செயற்பாடுகள் மற்றும் பணிகள் | 1 – 3 |
| 02 | ஆளணி முகாமைத்துவம் | 4 |
| 03 | அமைச்சின் ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு | 5 |
| 04 | அமைச்சின் நோக்கங்களினை நிறைவேற்றுவதற்கு நிறுவனங்கள் செயலாக்கப்பட்டுள்ள முறைமை | |
| 4.1 | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD) | 6 – 10 |
| 4.2 | சமூக சேவைகள் திணைக்களம் (DSS) | 11 – 16 |
| 4.3 | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் (NSPD) | 17 – 19 |
| 4.4 | முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE) | 20 – 24 |
| 4.5 | இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB) | 25 – 27 |
| 4.6 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD) | 28 – 32 |
| 4.7 | சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB) | 33 – 34 |
| 4.8 | கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் | 35 – 37 |
| 4.9 | உளவளத்துணைப் பிரிவு | 38 – 40 |
| 4.10 | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கூட்டாண்மைகளுக்கான செயலகம் (WFP) | 41- 45 |
| 4.11 | வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள் | 46 – 49 |
| 4.12 | பிற தொழிற்பாட்டுப் பிரிவுகள் | 50 – 51 |
| 4.13 | அமைச்சு மற்றும் பிற நிறுவனங்களினால் அடையப் பெற்ற விசேட சாதனைகள் | 52-53 |

# அமைச்சின்

## தொலைநோக்கு

வளர்ச்சியின்
பலாபலன்களினை
சமமாக அனுபவிக்கும்
சமூகம்

## பணிக்கூற்று

கிராமிய அபிவிருத்தியினை
மேம்படுத்துதல், சமூகப் பாதுகாப்பு
மற்றும் சமுதாய வலுவூட்டலினை
உறுதிப்படுத்துவதற்கு சகல
பங்குதாரர்களின் பங்கேற்புடன்
வேலைத்திட்டங்களினைத்
தயாரித்தல் மற்றும்
அமுலாக்குதல்.

# 1. அறிமுகம், செயற்பாடுகள் மற்றும் பணிகள்

குடிசன மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் (DCS) 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வீட்டு வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பின் பிரகாரம், இலங்கையின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 82.8 % கிராமப்புறம் மற்றும் தோட்டப் பகுதிகளில் வாழ்கின்றனர். அது மாத்திரமன்றி மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு ஆறு பேரில் ஒருவர் பல பரிமாண வறுமையினை எதிர்கொள்கின்றனர் என்பதுடன் மேலும் அவர்களின் நூற்றுக்கு 95.3% கிராமப்புற மற்றும் தோட்டப் பகுதிகளில் வாழ்கின்றனர். .நகர்ப்புறங்களுடன் ஒப்பிடும்போது, வறுமைத் தலைப்பு எண்ணிக்கைக் காட்டி, கிராமப் புறங்களில், நூற்றுக்குப் 10% த்தாலும் மற்றும் தோட்டப் பகுதிகளில் நூற்றுக்கு 27 % த்தாலும் அதிகரித்துள்ளதுடன், கல்வி வாய்ப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளுக்கான அணுகல் அதேபோல ஊழியப்படை மற்றும் சமூகச் செயற்பாடுகளில் பெண்கள் மற்றும் மூத்த பிரஜைகளின் பங்கேற்பு குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது. அது மாத்திரமன்றி, கிராமப்புற பகுதிகளில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகள், அப்பகுதிகளின் பொருளாதாரத்திலும் மற்றும் சமூகக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கமொன்றினை ஏற்படுத்தியுள்ளன.

நன்கு வடிவமைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு முறையை அறிமுகப்படுத்துவதனூடாக ஒரு நாட்டின் மனித மூலதனத்தினையும் மற்றும் உற்பத்தித் திறனினையும் அதிகரிக்கவும், சமத்துவமின்மையினைக் குறைக்கவும் மற்றும் வறுமையின் தீய சுழற்சியினை முடிவுக்குக் கொண்டுவரவும் உதவும். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வரைவிலக்கணத்தின் பிரகாரம் சமூகப் பாதுகாப்பு என்பது தனி நபர்கள் அல்லது குடும்ப அலகுகளினை அவர்களின் வாழ்நாள் முழுவதும் வறுமை மற்றும் பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்பதற்கு செயலாக்கப்படும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினைக் கொண்ட அமைப்பொன்றாகும். இலங்கையில் பல்வேறு சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் செயலாக்கப்பட்டாலும் அரசினூடாக ஒருங்கிணைப்பட்ட ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்களினை ஒருங்கிணைத்து செயற்படுத்தவேண்டிய அவசியம் இன்றைய காலகட்டத்தில் எழுந்துள்ளது.

ஆதலால், நாட்டின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தும் மேற்கூறிய சவால்களினை வெற்றிகொள்வதற்கு “ஒரு பணக்கார நாடு - ஒரு அழகான வாழ்க்கை” என்ற அரசின் கொள்கைக்கிணங்க, யாரையும் அல்லது எந்தப் பகுதியினையும் கைவிடாத வளர்ச்சி செயல்முறையொன்றினூடாக பல பரிமாண வறுமையினை ஒழிக்கவும், ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தங்கிய சமூகங்களின் சமூக நலனினை உறுதி செய்யவும் ஒரு விரிவான வேலைத்திட்டத்தின் தேவைப்பாடு எழுந்துள்ளது. .

அதன் பிரகாரம், இலங்கையின் கிராமப்புறங்களில் பேண்தகு அபிவிருத்தியொன்றினை ஊக்குவித்தல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை மேம்படுத்துதல் மற்றும் சுயாதீனமான சமூகமொன்றினை கட்டியெழுப்புவதற்கு சமூகங்களினை வலுவூட்டுதல் போன்ற அம்சங்களினை உள்ளடக்குவதற்கு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2412/8 என்ற இலக்க மற்றும் 2024.11.25 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியினூடாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சாக நிறுவப்பட்டுள்ளதுடன், இவ் அமைச்சின் பிரதான செயற்பாடுகள் மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

1. அரசினூடாக செயலாக்கப்படும் தேசியக் கொள்கையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுதல் விடயங்கள், அமைச்சுக்கு இணைக்கப்பட்ட திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், மூலோபாயங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களினை வகுத்தல், அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. அமைச்சு விடயப் பரப்புக்கு உரித்தான பொதுமக்கள் சேவைகளினை வினைத்திறனாகவும் மற்றும் நட்புடனும் வழங்குதல்.
3. விரயம் மற்றும் ஊழலினைத் துரத்துவதனூடாக அமைச்சின் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும் முறைமைக்கு அமைவாக புதிய முகாமைத்துவத் திட்டங்கள், தொழில்நுட்பத்தினைப் புகுத்தி சகல திட்டங்கள் மற்றும் ஒழுங்குகளினை மறுசீரமைத்தல்.
4. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்தும் முயற்சிகளினை எதிர்வரும் காலங்களில் அமுலாக்குதல்.
5. சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
6. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களின் தேவைகளினை அடையாளம் காணுதல் மற்றும் தேவைகளினை நிறைவேற்றுதல்.
7. பொதுசன உதவி முன்மொழிவுத் திட்டங்களினை மதிப்பாய்வு செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் பொருத்தமான புதிய சீர்திருத்தங்களினை அறிமுகம் செய்தல்.
8. காச நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், தொழுநோயாளிகள், புற்றுநோய் மற்றும் தலசீமியா நோயாளிகள் மற்றும் அவர்களினைச் சார்ந்தவர்களுக்கும் உதவி வழங்குதல்.
9. குடும்ப உளவளத்துனை சேவைகளினை அமுலாக்குதல்.
10. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளுடன் தொடர்பிலான நடவடிக்கைகள்.
11. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கும் மற்றும் தொழில் வாய்ப்புக்களினை உருவாக்கிக் கொடுப்பதற்கும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
12. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்கள் பிரதான நீரோட்டத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஏற்றவாறு தேவையான கொள்கைசார் மாற்றங்களினைச் செய்தல், தேவையான வசதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

13. விசேட தேவைகளினைக் கொண்ட நபர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினை அமுலாக்குதல்.
14. முதியோர்களினைப் பாதுகாத்தல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் பங்கேற்பினை மேலோங்கச் செய்தல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்குகத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகளினை, விளைத்திறன் மற்றும் வினைத்திறனான வகையில் நிறைவேற்றுவதற்குப் பின்வரும் திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் செயலூக்கமான வகையில் செயற்பட்டு வருகின்றன.

### ❖ கிராமிய அபிவிருத்திப் பிரிவு

i. கிராமிய அபிவிருத்திப் பணியகம் (RDB)
ii. கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

### ❖ சமூகப் பாதுகாப்புப் பிரிவு

iii. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)
iv. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)
v. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)
vi. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)
vii. உளவளத்துணைப் பிரிவு

### ❖ சமூக வலுவூட்டல் பிரிவு

viii. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)

### ❖ கல்விசார் நிறுவனம்

ix. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

### ❖ பிற

x. உலக உணவு நிகழ்ச்சித் திட்ட ஒத்துழைப்புக்கான கூட்டாண்மைச் செயலகம் (WFP)

தற்போது இந்நிறுவனங்களினூடாக சேவைகளினைப் பெற்றுக்கொள்ளும் முக்கிய இலக்குக் குழுக்கள் பின்வருமாறாகும்.

- முதியோர் சமூகம் 2.7 மில்லியன் (பதிவாளர் நாயகத் திணைக்களம், 2023)
- 5 வயதிற்கு மேற்பட்ட அங்கவீனமுற்ற சமூகம் 1.16 (ஊழியப்படை ஆய்வு, 2022)
- விவசாயிகள் மற்றும் மீனவர்களினைத் தவிர்த்து 2.7 மில்லியன் முறைசாராத் துறையில் கடமையாற்றும் சமூகம் (ஊழியப்படை கணக்கெடுப்பு, 2022)
- போதைப் பழக்கத்திற்கு அடிமையான 152,979 பேர் (பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம், 2022)
- மனநலக் கோளாறுகளினைக் கொண்ட அங்கவீனமுற்ற சமூகம் 0.8 மில்லியன் (சுகாதார அமைச்சு, 2017)
- சிறையில் அடைக்கப்பட்ட தனிநபர்களின் 28,500 குடும்பங்கள் (சமூக சீர்திருத்தத் திணைக்களம், 2024)
- தனிப் பெற்றாரினைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் வீடற்ற பிச்சைக்காரர்கள்

## 2. ஆளணி முகாமைத்துவம்

| | சிரேஸ்ட நிலை | | மூன்றாம் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்ப நிலை | | தற்காளின மாக ஒப்பந்த அடிப்படையி ல். | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட் டவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட் டவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட் டவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட் டவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட் டவர்களின் | அங்கீகரிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட் டவர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள்/மி கை |
| கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு (உளவளத்துணை ப் பிரிவு.) | 28 | 17 | 3 | 3 | 536 | 534 | 45 | 35 | 4 | 1 | 616 | 590 | 26 |
| திணைக்களங்கள்/நிறுவனங்கள்/பிரிவுகள் | | | | | | | | | | | | | |
| சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | 131 | 58 | 369 | 1313 | 24801 | 20206 | 431 | 414 | 0 | 0 | 25732 | 21991 | **3**741 |
| சமூக சேவைகள் திணைக்களம் | 8 | 6 | 502 | 223 | 683 | 644 | 288 | 253 | 11 | 0 | 1492 | 1126 | 366 |
| அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் | 6 | 4 | 3 | 2 | 53 | 37 | 6 | 2 | 0 | 0 | 68 | 45 | 23 |
| முதியோர்களுக் கான தேசிய செயலகம் | 7 | 3 | 2 | 1 | 115 | 101 | 23 | 12 | 0 | 0 | 147 | 117 | 30 |
| இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை | 8 | 7 | 17 | 10 | 130 | 93 | 43 | 38 | 0 | 0 | 198 | 148 | 50 |
| தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் | 53 | 31 | 9 | 4 | 49 | 34 | 26 | 21 | 0 | 0 | 137 | 90 | 46 |
| சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் | 15 | 10 | 4 | 0 | 74 | 28 | 10 | 2 | 0 | 0 | 103 | 40 | 63 |
| கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் | 4 | 3 | 14 | 11 | 21 | 18 | 11 | 6 | 0 | 0 | 50 | 38 | 12 |
| **உலக உணவு நிகழ்ச்சித் திட்ட ஒத்துழைப்புக்கா ன கூட்டாண்மைச் செயலகம்.** | 5 | 3 | 0 | 0 | 10 | 5 | 1 | 1 | **0** | **0** | **50** | **9** | **7** |
| **மொத்தம்** | **265** | **142** | **923** | **1567** | **26472** | **21700** | **884** | **784** | **15** | **1** | **28559** | **24194** | **4364** |

## 3. அமைச்சின் ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பிலான பொழிப்பு

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சுக்கு 2025 ஆம் ஆண்டில் செலவுத் தலைப்பு 124 இன் கீழும், சமூக சேவைகள் திணைக்களம் செலவுத் தலைப்பு 216 இன் கீழும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் செலவுத் தலைப்பு 331 இன் கீழும் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ன.

அதன் பிரகாரம், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகள் மற்றும் நிதி முன்னேற்றம் பின்வருமாறாகும்.

| செலவு வகை | 2025 ஆம் ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | 2025.01.01 தொடக்கம் 2025.09.30 ஆந் திகதி வரையிலான நிதி முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| **கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - செலவுத் தலைப்பு 124** | | |
| மூலதனம் | **5,117.70** | **664.08** |
| மீண்டுவரும் | **1,841.30** | **1,064.90** |
| **உப தொகை** | **6,959.00** | **1,728.98** |
| **சமூக சேவைகள் திணைக்களம் - செலவுத் தலைப்பு 216** | | |
| மூலதனம் | **138.86** | **25.80** |
| மீண்டுவரும் | **1,531.14** | **1,002.46** |
| **உப தொகை** | **1,670.00** | **1,028.26** |
| **சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - செலவுத் தலைப்பு 331** | | |
| மூலதனம் | **1,118.00** | **87.80** |
| மீண்டுவரும் | **21,603.00** | **15,865.38** |
| **உப தொகை** | **22,721.00** | **15,953.18** |
| **முழு மொத்தம்** | **31,350.00** | **18,710.42** |

# 4.அமைச்சின் நோக்கங்களினை நிறைவேற்றுவதில் நிறுவனங்கள் செயலாக்கப்பட்டுள்ள முறைமை.

## 4.1. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)

### அறிமுகம்

இலங்கையில் வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக நீதியினை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளினை மேம்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு ஏழையிலும் மறைந்திருக்கும் திறனை அடக்கும் தடைகளினை நீக்குவதன் மூலம், அக்குடும்பங்களினை வலுவூட்டுதல், சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி (திருத்தம்) சட்டத்தினைக் கொண்டு திருத்தப்பட்ட 2013 ஆம் அண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தினூடாக அமைக்கப்பட்டுள்ளது.

### நோக்கங்கள்

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களினை, பொருளாதார, சமூக மற்றும் உளவியல் போன்ற துறைகளிலிருந்து வலுவூட்டி நிலைபேறான மற்றும் உயர்தர வாழ்க்கைத் தரத்தினை அமையப் பெற்ற குடும்ப அலகுகளாக மாற்றுதல்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

### கடமைப் பொறுப்பு

- 2025 தொடக்கம் 2029 வரையிலான 05 வருடக் காலப்பகுதியினுள், பல பரிமாண வறுமையினை எதிர்கொள்ளும் 2 மில்லியன் குடும்பங்களினை, பொருளாதார, சமூக மற்றும் உளவியல் பிரிவுகளின் கீழ் வலுவூட்டுதல்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானம் ஈட்டும் வழிகள் மற்றும் வாழ்வாதார வழிகளினை மேம்படுத்துவதற்கு நுண் நிதியக் கடன் வசதிகளினை வழங்குதல்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சமூக அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயலாக்குதல்.

### அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் – 2025 மற்றும் முன்னேற்றம் – 2025.09.30 ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 1,118.00 | 87.80 |
| மீண்டுவரும் | 21,603.00 | 15,865.38 |
| மொத்தம் | 22,721.00 | 15,953.18 |

## முதன்மையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.

### சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குதல்.

பல பரிமாண வறுமையினை எதிர்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்காக 2025 தொடக்கம் 2029 ஆம் ஆண்டு வரையிலான 05 வருடக் காலப்பகுதியினுள் "அஸ்வெசும" பயன்களினைப் பெறும் குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானத்தினைப் பெறும் 2 மில்லியன் குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குதல், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் முதன்மையான செயற்பாடு என்பதுடன், அது முக்கியமான 03 நிதிக் கூறுகளின் கீழ் இதுவரை செயற்படுத்தலை ஆரம்பித்துள்ளது.

1. உள்ளூர் நிதிகள்
2. ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவி (முன்னோடி செயற்றிட்ட இலக்கம் 1)
3. உலக வங்கிக் கடன் உதவி (முன்னோடி செயற்றிட்ட இலக்கம் 2)

### உள்ளூர் நிதிகளினைப் பயன்படுத்தி வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.

இவ்வருடத்தின் இலக்காக அஸ்வெசும பயன்களினைப் பெறும் குடும்பங்கள் 300,000 மற்றும் அஸ்வெசும கிடைக்காத ஆனால் சமுர்த்தி நிவாரண உதவியினைப் பெறும் 100,000 குடும்பங்களாக மொத்தம் 400,000 குடும்பங்களாகும். அது தொடர்பில் ரூபா. 1,000 மில்லியன் 2025 ஆம் ஆண்டு தொடர்பில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆந் திகதி வரையிலான முன்னேற்றம் ரூபா. 90.2 மில்லியனாகும். அதன் கீழ், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான 365 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. 270 முதன்மையான பயிற்சியாளர்கள் மற்றும் 10,502 வெளிக்கள உத்தியோகத்தர்களினைப் பயிற்சியளித்தல் நிறைவு பெற்றுள்ளது. இதுவரையில் 276,900 பயனாளிகளினைத் தெரிவு செய்தல் இடம்பெற்றுள்ளதுடன், 209,386 குடும்ப மேம்பாட்டுத் திட்டங்களினையும் மற்றும் 26,270 வணிகத் திட்டங்களினையும் தயாரித்தல் நிறைவு பெற்றுள்ளன. 1,808 தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் 1,389 இளைஞர் யுவதிகள் தொழில் வாய்ப்புக்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளனர். சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தொடர்பில் 475 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. உள்ளூர் நிதியின் கீழ் தொழிலினைத் தொடங்குதல் அல்லது சுய தொழிலொன்றினை ஆரம்பிப்பதற்கு சமுர்த்தி வங்கிகளினூடாக நுண் நிதியக் கடனினை வழங்குதல் இடம்பெற்றுள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இவ்வாறு கடனினை வழங்குவதற்கு வட்டி நிவாரணமொன்றினை வழங்குவதற்கு பாதீட்டு முன்மொழிவுகளினூடாக ரூபா. 500 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதுடன், இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் 9,570 தொழில்முனைவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியின் கீழ் செயற்றிட்டம் (முன்னோடிச் செயற்றிட்ட இலக்கம் 01)

அஸ்வெசும பயனாளிகளினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடியான செயற்றிட்டமொன்றாக ஆசிய அபிவிருத்தி விங்கு நிதியுதவியி னைப் பயன்படுத்தி அஸ்வெசும பயனாளிகளுக்கிடையே வறிய மற்றும் கடுமையான வறிய 12,800 குடும்பங்களினை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு இச் செயற்றிட்டம் அமுலாக்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு அவசர உதவி செயற்றிட்டத்தின் கீழ் இது தொடர்பில் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அமுலாக்குதல் இடம்பெற்றுவருகிறது. இது 2022.09.09 ஆம் ஆண்டு தொடக்கம் 2026.08.29 அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த நிதி 7 அமெரிக்க டொலர் மில்லியனாகும். (2025 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா. 2,000 மில்லியனாகும்.). இதன் கீழ் அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருனாகல், கேகாலை, களுத்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச்செயற்றிட்டம் தொடர்பில் ரூபா. 32.7 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் செயற்றிட்டத் திட்டமிடல், பயனாளிகள் தெரிவு மற்றும் ஆட்சேர்ப்புச் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன. அதேபோல ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட குடும்பங்கள் தொடர்பில், 10,500 குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள், 3,880 வணிகத் திட்டங்கள் மற்றும் தொழில் திட்டங்களினைத் தயாரித்தல் நிறைவு பெற்றுள்ளன. பயனாளிகளுக்கு வலுவூட்டும் கொடுப்பனவினை வழங்குதல் நவம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள சமனலவெவ மற்றும் நில்லம்பவில் அமைந்துள்ள பயிற்சியளிக்கும் நிலையங்களின் பழுதுபார்ப்புச் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன.

## உலக வங்கி நிதியுதவிச் செயற்றிட்டம் (முன்னோடிச் செயற்றிட்டம் இலக்கம் 02)

அஸ்வெசும பயனாளிகளினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடியான செயற்றிட்டமொன்றாக உலக வங்கி நிதியுதவியினைப் பயன்படுத்தி அஸ்வெசும பயனாளிகளுக்கிடையே வறிய மற்றும் கடுமையான வறிய 10,975 குடும்பங்களினை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு இச்செயற்றிட்டம் அமுலாக்கப்படுகிறது. இச்செயற்றிட்டம், 2023.12.14 ஆந் திகதி தொடக்கம் 2027.09.30 ஆந் திகதி வரை அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் 08 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. (2025 ஆம் ஆண்டு தொடர்பில்

ரூபா. 1,118 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளது). இச் செயற்றிட்டத்தினூடாக காலி, மாத்தறை, கம்பாந்தோட்டை, கம்பகா, புத்தளம், கொழும்பு, மொனராகல, மன்னார், பதுளை. அம்பாறை, இரத்தினபுரி மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச் செயற்றிட்டம் தொடர்பில் ரூபா. 17.67 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் செயற்றிட்டத் திட்டமிடல், பயனாளிகள் தெரிவு மற்றும் ஆட்சேர்ப்புச் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன. அதேபோல ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட குடும்பங்கள் தொடர்பில், 4,553 குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள், செயற்றிட்டத் திட்டங்கள் மற்றும் தொழில் திட்டங்களினைத் தயாரித்தல் நிறைவு பெற்றுள்ளன. பயனாளிகளுக்கான வலுவூட்டல் கொடுப்பனவினை வழங்குவதல் நவம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## திணைக்களம்சார் நிதியின் கீழ் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

### சமூக அபிவிருத்தி நிதியம்

இந் நிதியத்தினூடாக 2025 ஆம ஆண்டுக்கான ஒதுக்கீடுகளாக ரூபா. 64 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆந் திகதி வரையில் ரூபா. 2.42 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

- சமுர்த்தி கெகுலு சிறுவர்கள் சமூக, கலாசார மற்றும் எழுத்தறிவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 18,257 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்.
- 2,094 புகையிலை, போதைப்பொருள் தடுப்பு மற்றும் மகிழ்ச்சியான குடும்ப நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- சர்சதேச தினங்களுக்கு இணையாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான 2,553 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- தேசிய மற்றும் மாவட்ட அளவில் 104 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல்.
- சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தேசியக் கொடி விற்பனை நிகழ்ச்சி நடத்தப்பட்டு ரூ. 157.22 மில்லியன் நிதி திரட்டப்பட்டது.

### சமுதாய அடிப்படையிலான வங்கி நிதியம்

இந் நிதியத்தினூடாக 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளாக ரூபா. 38,664 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆந் திகதி வரையில் ரூபா. 34,513.23 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

- வறிய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 191,320 நுண் நிதியக் கடனினை வழங்குதல் - (நிதி முன்னேற்றம் ரூபா. 34,512.20 மில்லியன்).
- வங்கி கணனிமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல்.

## சமூகப் பாதுகாப்பு நிதியம்

இந் நிதியத்தினூடாக 2025 ஆம் ஆண்டு தொடர்பில் ஒதுக்கீடுகளாக ரூபா. 1229.30 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆந் திகதி வரையில் ரூபா. 589.36 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ் பின்வருமாறு செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களினைச் சேர்ந்த உயர்தரத்தினைத் தொடரும் 33265 மாணவர்களுக்கு சிப்தொர புலமைப்பரிசில் நிதி வழங்குதல்.
- தலைமை அலுவலகத்திற்கு எழுதுகருவிகள் மற்றும் அலுவலகப் பொருட்களினை வழங்குதல்.
- மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு எழுதுகருவிகள் மற்றும் அலுவலகப் பொருட்களினை வழங்குதல்
- நிலாவெளி சமுர்த்திப் பயிற்சி நிலையத்திற்கு எழுதுகருவிகள் மற்றும் அலுவலகப் பொருட்களினை வழங்குதல்.

## வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சமுர்த்தி நிவாரண உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்களினைப் பெற்ற, குறைந்த வருமானம் பெறுபவர்களின் பங்களிப்புடன் கட்டியெழுப்பப்பட்ட சமுர்த்தி லொத்தர் நிதியத்திலிருந்து, ஒரு பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த 3 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடொன்றினைக் கட்டுவதற்காக ரூபா. 1.0 மில்லியன் என்றவாறு நிதியுதவி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அது தொடர்பில் 2025 ஆம் ஆண்டுக்கு ரூபா. 1,020 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு, தற்போது பயனாளிகளினை அடையாளம் காண்பது இடம்பெறுகிறது.

# 4.2. சமூக சேவைகள் திணைக்களம் (DSS)

## அறிமுகம்

ஸ்ரீமத் ஐவர் ஜெனிங்க்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி, ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கு சிறந்த சூழலினைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் சமூக சேவைகள் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் எவரையும் அல்லது எந்தப் பகுதியொன்றையும் கைவிடாது, சலுகைகள் கிடைக்காத, நாட்டிலுள்ள ஒட்டுமொத்த சமூகத்திற்குமென பிறப்பு முதல் இறப்பு வரை நடைமுறைப்படுத்தப்படும் ஊடாடும் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று 2025 ஆம் ஆண்டு தொடக்கம் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அதில், அமைச்சின் கீழ் சமூகப் பாதுகாப்புத் தொடர்பில் செயற்படும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகம், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை மற்றும் உளவளத்துணைப் பிரிவு போன்ற சகல நிறுவனங்கள் சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து, பயனாளிகளுக்காகத் தயாரிக்கப்பட்ட மறுவாழ்வுத் திட்டத்தின் பிரகாரம், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவது இடம்பெற்றுவருகிறது.

## நோக்கங்கள்

- அங்கவீனமுற்ற நபர்கள் உள்ளடங்கலாக பிற ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு சலுகை கிடைக்கப் பெறாத சமுதாயத்தின் சம உரிமைகள், வாய்ப்புகள், சுதந்திரம் மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு வருவாய் ஈட்டுவதற்கான அணுகலினை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

## கடமைப் பொறுப்பு

- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினூடாக அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளின் தொழில்வாண்மைச் செயற்பாடுகளினை புதிய தொழில்நுட்ப முறைமைகளினைப் பயன்படுத்தி தற்போதுள்ள சந்தைக்கு ஏற்றவாறு மேம்படுத்துதல்.
- அங்கவீனத்தினைக் கொண்ட பிள்ளைகள் தொடர்பில் முன்கூட்டிய தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயலாக்குதல் மற்றும் அவர்களினை சமூகமயமாக்குதல்.
- பெற்றோர் பாதுகாவலரினை இழந்த அங்கவீனமுற்ற நபர்களுக்கு முழுநேர வதிவிடப் பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் வலுவூட்டுதல்.
- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயமாக்குதல்.
- விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்,

- சமுதாய அடிப்படை புனர்வாழ்வுச் செயற்பாட்டினைப் பலப்படுத்தி பிரபல்யப்படுத்துவதற்கு பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டக் கண்காணிப்புக் குழுக்களின் மூலம் கண்காணிக்கப்படும் சுய உதவி அமைப்புக்களினூடாக புனர்வாழ்வுத் திட்டங்களினூடாக வாடிக்கையாளர்களினை வலுவூட்டும் வேலைத்திட்டமொன்றினை அமுலாக்குதல்.
- சைகை மொழிபெயர்ப்புச் சேவையினை வழங்குதல்.
- ரிதியகம தடுப்பு நிலையத்தினூடாக பிச்சைக்காரர்களினைப் புனர்வாழ்வளித்தல்.

## 2025 அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 138.86 | 25.80 |
| மீண்டுவரும் | 1,531.14 | 1002.46 |
| மொத்தம் | **1,670.00** | **1,028.26** |

## முதன்மையான நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.

## மீண்டுவரும் ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்படும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.

## வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களினூடாக அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.

- 16-35 வயதிற்கிடைப்பட்ட அங்கவீனமுற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நாடுபூராவும் அமுலாக்கப்படும் 11 வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனங்களினூடாக 496 அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 10.36 மில்லியன்.
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் பராமரிப்பு நிலையங்களிலுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கு சீருடைகளினைப் பெற்றுக்கொள்ளல் - நிதி முன்னேற்றம் ரூபா. 3.16 மில்லியன்.
- 4 திறன் விருத்தி நிலையங்களுக்கு பராமரிப்பு உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.10 மில்லியன்.
- 52 திறன் விருத்தி ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 3.98 மில்லியன்.
- 265 அங்கவீனமுற்ற நபர்களுக்கு பொசொன் விழாப் போட்டிகளினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.46 மில்லியன்.
- வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் திறன் விருத்தி நிலையங்களிலுள்ள 794 அங்கவீனமுற்ற நபர்களுக்கு தினசரிக் கொடுப்பனவினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 16.08 மில்லியன்.

## அங்கவீனமுற்ற சிறுவர்களின் ஆரம்பகால பருவ வளர்ச்சி

- இலங்கையில் வசிக்கும் அங்கவீனமுற்ற சிறுவர்களின் ஆரம்பகால வளர்ச்சிக்கான தலையீட்டுத் திட்டமாக இச் செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இது நாவின்ன, சித்திஜய சிறுவர் வழிகாட்டல் மையங்களை கேந்திர மையமாக கொண்டு செயற்படுகின்றது. தற்போது, நாவின்ன குழந்தை வழிகாட்டுதல் மையத்தில் 102 குழந்தைகளும், சிதிஜெய குழந்தை வழிகாட்டுதல் மையத்தில் 47 குழந்தைகளும் பயிற்சி பெறுகின்றனர்.

## உளவியல் குறைபாடுள்ள நபர்களுக்கு அரவனைப்பு வழங்குதல்.

- பெற்றோர்களையும் பாதுகாவர்ளையும் இழந்த உளவியல் குறைபாடுள்ள ஆண், பெண் தனிநபர்களை தனிமைப்படுத்தாமல் அவர்களது வாழ்னாள் முழுவதும் அன்பு மற்றும் பாசத்துடன் பராமரிப்பதன் மூலம் புனர்வாழ்வு அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆண் நபர்கள் 90 பேர் புவக்பிட்டியில் உள்ள ஜயவிரு செவன திணைக்களத்திலும் பெண் நபர்கள் 35 பேர் படுகம்மன திணைக்களத்திலும் புனர்வாழ்வு பெற்று வருகின்றார்கள்.

## போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல்.

- போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வு மற்றும் தொழிற்பயிற்சிக்கு பிறகு அவர்களை மீன்டும் சமூகமயப்படுத்தல் இத்திட்டத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. புவக்பிட்டியில் அமைந்துள்ள ஜயவிரு சமாதி நிறுவனத்தால் செயற்படுத்தப்படுகின்றது. இவ் நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட பிறகு போதைக்கு அடிமையானவர்கள் உளவியல் சிகிச்சை, உளவியல் ஆலோசணை திட்டங்கள் மற்றும் மருத்தவ மற்றும் உளவியல் தலையீடுகள் மூலம் தங்கியிருந்து புனர்வாழ்வு செயல்முறைக்கு பரிந்துரைக்கப்படுகிரார்கள். இந்த ஆண்டு மறுவாழ்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 60. சமூகமயமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 64 ஆகும்.

  போதைக்கு அடிமையானவர்கள் தொடர்பாக பின்வரும் திட்டங்கள் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களிலும் செயற்படுத்தப்படுகின்றன.

- போதைப்பொருளுக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளிப்பதன் கீழ் மாவட்ட மட்டத்தில் 9 தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை நடைமுறைப்படுத்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.23 மில்லியன்.
- புனர்வாழ்வளிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு பின்தொடர் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.06 மில்லியன்.

## விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம்

- சா/த., உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 248 விழிப்புலனற்ற பிள்ளைகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.95 மில்லியன்.
- பின்னரான காலப்பகுதியில் விழிப்புலனற்ற 15 மாணவர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு உதவியினை வழங்குதல் மற்றும் 5 போதனாசிரியர்களுக்குக் கொடுப்பனவுகளினை வழங்குதல். (நிதி முன்னேற்றம் - ரூபா. 0.97 மில்லியன்)

### அங்கவீனமுற்ற நபர்களின் பொழுதுபோக்குசார் செயற்பாடுகளுக்கு வசதிகளினை வழங்குதல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டியொன்றினை நடாத்துதல்.
- சித் றூ நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல்.
- சைகை மொழித் தினத்தினைக் கொண்டாடுதல்

(நிதி முன்னேற்றம் - ரூபா. 27.03)

### ரிதியகம பிச்சைக்காரர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு அமுலாக்கப்படும் ரிதியகம தடுப்பு இல்லம்

நாடோடி கட்டளைச் சட்டத்திற்கு அமைய நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்படுகின்ற ஆட்களுக்கு தடுத்து வைத்தல் இல்லம் சட்டத்தின் கீழ் அரவணைப்பு வழங்கப்படுகின்ற மத்திய அரசின் கீழ் இயங்கி வருகின்ற ஒரே நிறுவனமாக இருப்பது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் தாபிக்கப்பட்டுள்ள ரிதியகம கலன தடுத்துவைத்தல் இல்லமாகும். தற்போது சேவை பெறுவோர் சுமார் 500 பேருக்கு இங்கு அரவணைப்பு வழங்கப்படுகின்றது.

- ரிதியகம 484 பிச்சைக்காரர்களுக்கு மூலப்பொருட்கள், நலன்புரிப் பொருட்கள் மற்றும் பிற பொருட்களினை வழங்குதல் (நிதி முன்னேற்றம் ரூபா. 1.45 மில்லியன்).
- ரிதியகம 484 பிச்சைக்காரர்களுக்கு சீருடைகள், ரீசேட் வழங்குதல் (நிதி முன்னேற்றம் ரூபா. 4.71 மில்லியன்)
- ரிதியகம பிச்சைக்காரர்களுக்கு ஆன்மீகம்சார் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல்.

## மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.

### சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம்.

- 17 அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி உபகரணங்களினை வழங்குதல் - (நிதி முன்னேற்றம் ரூபா. 0.42 மில்லியன்)
- 60 கனவு ஸ்ரீ லங்கா நிலையங்களினை நிறுவுதல் - (நிதி முன்னேற்றம் ரூபா. 0.21 மில்லியன்)
- அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டுவதற்கு 7 விசேட செயற்றிட்டங்களினை அமுலாக்குதல் (நிதி முன்னேற்றம் ரூபா. 0.67 மில்லியன்)
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு 25 தொழில்முனைவோர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் - (நிதி முன்னேற்றம் ரூபா. 0.24 மில்லியன்)

- 1245 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல் (நிதி முன்னேற்றம் ரூபா. 1.86 மில்லியன்)

## அங்கவீனமுற்ற நபர்களுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களினைப் புதுப்பித்தல்.

- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கைத்தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் புதுப்பிக்கும் மற்றும் பழுதுபார்க்கும் செயற்பாடுகள் 60% பூர்த்தி செய்யப்படுதல்

## கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்தின் கட்டுமானம்

- அங்கவீனமுற்ற இளைஞர் யுவதிகளுக்க் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதை நோக்கமாகக் கொணடு கிளிநொச்சிப் பகுதியின் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 95% பூர்த்தி செய்யப்படுதல். - (நிதி முன்னேற்றம் ரூபா. 9.65 மில்லியன்)

## உத்தியோகத்தர் பயிற்சி

- தலைமை அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் உத்தியோகத்தர்களுக்கு 29 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். - (நிதி முன்னேற்றம் ரூபா. 0.84 மில்லியன்)

## பிற நிகழ்ச்சித் திட்டங்கள்

- தொழில் உதவிசார் அலகினூடாக 356 அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.

## அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கு திறன் விருத்தி பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களினை ஆரம்பித்தல்.

அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான கொள்கைக்கமைவாக, “ஒன்றாக ஒருவரையும் கைவிடாது என்ற எண்ணக்கருவின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் பொறுப்புக்களினை நிறைவேற்றுவதற்கும், வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதில் அங்கவீனமுற்ற பிள்ளைகளினைக் கொண்ட பெற்றோர்கள், பொருத்தமான தொழிலொன்றில் ஈடுபடும் வாய்ப்பினை இழந்து அங்கவீனமுற்ற பிள்ளைகளினை முழுநேரமும் பராமரித்துக் கொள்ளுவதற்கு நேரிடும் என்பதால் உள ரீதியில் உபாதைக்கு உட்படும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தொடர்பில் ஓரளவு நிவாரணம் வழங்கக்கூடியவாறு அவர்களுக்குப் பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபடும் வாய்ப்புக்கான பாதீட்டுப் பிரேரணைகள் - 2025 இன் கீழ் மாவட்ட மட்டத்தில் திறன் விருத்தி பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களினை ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் இது வரையில் எடுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் 2025 ஆம் ஆண்டில் பின்வரும் 8 மாவட்டங்களினூடாக திறன் விருத்தி பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களினை செயல்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது, (ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் அளவு ரூபா. 250 மில்லியன்)

| தொடர் இல. | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு |
|---|---|---|
| 01 | காலி | அக்மீமன |
| 02 | கம்பாந்தோட்டை | வீரகெட்டிய |
| 03 | திருகோணமலை | கிண்ணியா |
| 04 | மாத்தறை | அக்குரஸ்ஸ |
| 05 | களுத்துறை | பானந்துறை |
| 06 | கேகாலை | வரக்காப்பொள |
| 07 | அனுராதபுரம் | திரப்பனே |
| 08 | குருனாகல் | குருனாகல் |

இது வரையில் திருகோணமலை, காலி, கம்பாந்தோட்டை மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களினுள் இத்திறன் விருத்தி பகல்நேரப் பராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், களுத்துறை, அனுராதபுரம் மற்றும் மாத்தறை போன்ற மாவட்டங்களில் கொள்முதல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது. இவ்வருடத்தினுள் திருகோணமலை, கேகாலை, காலி மற்றும் கம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களின் கட்டுமானப் பணிகளினை நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

# 4.3. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSPD)

## அறிமுகம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினூடாக எடுக்கப்பட்ட கொள்கைசார் தீர்மானங்களினைச் செயலாக்குதல் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சினேகபூர்வமான சூழலொன்றினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் நலன்புரி உள்ளிட்ட நிவாரணங்களினை வழங்குதல், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக இடம்பெறுகிறது.

## நோக்கங்கள்

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழலொன்றினைக் கட்டியெழுப்புதல்.
- அங்கவீனமுற்ற நபர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமுதாயங்களின் தன்னிறைவு மற்றும் ஈடுகொடுக்கும் இயலுமையுடன் அவர்களினை சமுதாய மற்றும் பொருளாதார ரீதியில் மேலோங்கச் செய்வதற்கு வலுவூட்டுதல்.
- அனைவருக்கும் சமத்துவமான உரிமைகள், வாய்ப்புகள், சுதந்திரம் மற்றும் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

## கடமைப் பொறுப்பு

- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் உரிமைகளினைப் பாதுகாத்தல்.
- குறைந்த வருமானத்தினைக் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களின் அடிப்படைத் தேவைகளுக்கான வசதிகளினைச் செய்து கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சுகாதாரம், கல்வி, தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பிரவேசிப்பு வசதிகள் தொடர்பிலான வாய்ப்புக்களினை விரிவுபடுத்துதல்.

## அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் - 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூபா.மி.) | முன்னேற்றம் (ரூபா.மி.) |
|---|---:|---:|
| மூலதனம் | 650.40 | 32.03 |
| மீண்டுவரும் | 34.60 | 10.49 |
| **மொத்தம்** | **685.00** | **42.52** |

## முதன்மையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 ஆந் திகதி வரை நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

## சட்டவிதிகளினை வலுப்படுத்துதல்.

### அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவு

ஆரம்பச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை அங்கத்தவர்களின் கருத்துக்களினைப் பெறுவதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### சைகை மொழிச் சட்ட வரைவு

சைகை மொழி தொடர்பிலான சட்டம் வரைவாக்கப்பட்டுள்ளதுடன் பரிசீலனைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடலினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளைகள் வர்த்தமானி

அரச கட்டிடங்கள், பிரசித்தி பெற்ற இடங்கள் மற்றும் சேவைகளினைக் கொண்ட இடங்கள் அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடியவாறு அமைப்பதற்காக 2006.10.17 ஆந் திகதி மற்றும் 1467/15 என்ற அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கப் பிரவேசிப்புக் கட்டளைகள் வர்த்தமானி மற்றும் அதனைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள 1619./24 என்ற இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல், சர்வதேச விவரக் குறிப்பு மற்றும் தற்போதுள்ள நிலைமைக்குப் பொருந்தும் வகையில் வரைவு செய்யப்பட்டுள்ளது. இதனை மும்மொழிகளிலும் தயாரிப்பதற்கு மொழிபெயர்ப்புச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

### அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசியக் கொள்கையினைத் தயாரித்தல்.

ஆரம்ப ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டு முதலாவது வரைவினைத் தயாரிப்பதற்காக தேசிய சபைக் குழு அங்கத்தவர்களினதும் மற்றும் தொழில்நுட்பக குழு அங்கத்தவர்களினதும் கருத்துக்களினைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.

### நிதி உதவியினை வழங்குதல்.

- 365 அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவியினை வழங்குதல் (அறுவை சிகிச்சை, மருந்துகள் மற்றும் சிகிச்சைகளுக்குச் சென்று வருவதற்கான செலவுகள் தொடர்பில்) - நிதி முன்னேற்றம் ரூபா. 9.50 மில்லியன்.
- 422 அங்கவீனமுற்ற மாணவர்ளுக்கு கல்விசார் உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 11.10 மில்லியன்.
- 127 அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுயதொழில்கள் தொடர்பில் உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 5.19 மில்லியன்)

### உதவிசார் உபகரணங்களினை வழங்குதல் (மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள், கையூன்றுகோல்கள் போன்றன)

- 239 அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவிசார் கருவிகளினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 3.00 மில்லியன்.

### அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்கும் தன்னார்வத் தொண்டு அமைப்புக்களுக்கு நிதியுதவியினை வழங்குதல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சேவைகளினை வழங்கும் 3 தன்னார்வத் தொண்டு அமைப்புக்களுக்கு நிதியுதவியனை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.60 மில்லியன்.

### அங்கவீனமுற்ற நபர்களின் திறன் விருத்தியினை ஊக்குவித்தல்.

- அங்கவீனமுற்ற நபர்களின் திறன் விருத்தியினை ஊக்குவிப்பதற்கு 6 நிறுவனங்களுக்கு உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.44 மில்லியன்.

### மூலதனச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல்

- அக்குரஸ்ஸ முன்பிள்ளைப்பருவ விருத்தி நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களினைப் பெறுதல்.

### விக்டோரியா இல்லத்திற்கு மாதாந்தப் பராமரிப்புச் செலவுகளினை வழங்குதல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் விக்டோரியா இல்லத்தின் மாதாந்தப் பராமரிப்புச் செலவுகளினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 8.75 மில்லியன் (120 அங்கவீனமுற்ற நபர்கள் விடுதியில் வசிக்கின்றனர்)

### அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.

- 34 அங்கவீனமுற்ற நபர்களுக்கு பிரத்தியேகப் பிரிவில் தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல் மற்றும் அவர்களின் சம்பளத்திலிருந்து 50% (ஆகக்கூடியது 15,000) வரை அரசினால் கொடுப்பனவு இடம்பெறும். - நிதி முன்னேற்றம் ரூபா. 0.90 மில்லியன்.

## பிற ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டுவசதி மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல்

இதற்காக ஆண்டுதோறும் சூப்பர் வாசனா சம்பத லாட்டரி நிதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் 5% ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதன்படி, பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- 208 அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 31.3 மில்லியன்.
- 62 அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சுகாதார வசதிகளினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 6.2 மில்லியன்.

### அங்கவீனமுற்ற நபர்களுக்கான செயலக நிதியம்

- 60 அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவியினை வழங்குதல் (அறுவை சிகிச்சை, மருந்துகள் மற்றும் சிகிச்சைகளுக்குச் சென்றுவருவதற்குப் போக்குவரத்துச் செலவுகள் தொடர்பில்) - நிதி முன்னேற்றம் ரூபா. 1.57 மில்லியன்.

# 4.4. முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் (NSE)

## அறிமுகம்

2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களினை உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினூடாக முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் நிறுவப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

- முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல்
- முதியோர்களின் உடல், உளச் சமநிலை மற்றும் ஆரோக்கியத்தினை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் நலன்புரியினை மேம்படுத்துதல்.
- முதியோர்களினைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல்.

## கடமைப் பொறுப்பு

- முதியோர்களுக்கு அரவணைப்பு, பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை வழங்குதல் குடும்பத்தினூடாக நிறைவேற்ற வேண்டிய செயற்பாடு என்பதைச் சமுதாயத்திற்கு உணர்த்துதல்.
- முதியோர்களினைப் பாதுகாப்பதற்காக பிரத்தியேகப் பிரிவின் முதலீட்டு வாய்ப்புக்களினை அதிகரித்தல்.
- முதியோர்களின் இயலுமைகள், திறன் விருத்தியினூடாக வருமானத்தினை ஈட்டுவதை நோக்கி அவர்களினை வழி நடாத்துதல்.
- விழிப்புணர்வினை வளர்ப்பதனூடாக ஓய்வுகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளினைச் சமாளிப்பதற்குத தயார்படுத்துதல்.
- உதவி தேவைப்படும் முதியோர்களுக்குப் பாதுகாப்பினை வழங்குதல்.

## அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் - 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி. |
|---|---|---|
| மூலதனம் | **20.00** | **4.66** |
| மீண்டுவரும் | **384.80** | **195.46** |
| மொத்தம் | **404.80** | **200.12** |

## முதன்மையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்

## சட்டவிதிகளினை வலுப்படுத்துதல்.

### முதியோர் தேசியக் கொள்கையினைத் தயாரித்தல்.

2006 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான கொள்கை விதிக்கோவையொன்று வெளியிடப்பட்டுள்ளதுடன், அக்கொள்கையினைக் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றி புதிய கொள்கையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும் என முதியோர்களுக்கான தேசிய சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக துரிதமாக வளர்ந்துவரும் முதியோர் மக்கள் தொகையிலிருந்து எழும் சிக்கலான சவால்களினை எதிர்கொள்வதற்கு இலங்கையில் முதியோருக்கான விரிவான தேசியக் கொள்கையொன்று அவசியம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் குடிசன மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் 2012-2024 தரவுகளின் பிரகாரம் 60 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட மக்கள் தொகை 1981 ஆம் ஆண்டில் 6.6%, 2012 ஆம் ஆண்டில் 12% வரை இருமடங்காகவும், 2024 ஆம் ஆண்டில் 18% வரை அதிகரித்துள்ளதாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இத்தேவைப்பாட்டினை எதிர்கொள்வதற்காக முதியோர்களுக்கான தேசிய சபையினால் இலங்கையில் முதியோர்களுக்கான தேசியக் கொள்கையொன்றினைத் தயாரிப்பதற்காக கொள்கை வகுப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கொள்கை வகுப்பாளர் குழுவினால் தயாரிக்கப்பட்ட முதியோர் தேசியக் கொள்கை, முதியோர்களுக்கான தேசிய சபை, தேசியத் திட்டமிடல் திணைக்களம் மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பிற்பாடு 2025 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி நடாத்தப்பட்ட தேசிய முதியோர் தின நிகழ்வில் இலங்கையில் முதியோர்களுக்கான தேசியக் கொள்கையாக மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

### முதியோர் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டம்

இலங்கைவாழ் முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, சுயநிறைவு, பங்கேற்பு மற்றும் கண்ணியத்தினை உறுதி செய்வதன் மூலம் முதியோர்களின நலன்புரி மற்றும் உரிமைகளினை மேம்படுத்துவதற்காக 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கத் திருத்தம் செய்யப்பட்ட சட்டத்தின் மூலம் முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் முதியோர்களுக்கான தேசிய செயலகம் நிறுவப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் காலத்தின் தேவைக்கேற்ப மீளவும் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும் என 2019.05.14 ஆந் திகதி நடாத்தப்பட்ட முதியோர்களுக்கான தேசிய சபையின் 20 ஆவது சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல 2019 ஆம் ஆண்டில் சட்ட நடவடிக்கைகள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும் ஊடகங்கள் தொடர்பிலான துறைசார் கண்காணிப்புச் செயற்குழுவினால் முதியோர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினை திருத்துதல் வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், 2023.05.10 ஆந் திகதி நடைபெற்ற வழிகள் மற்றும் வழிமுறைகள் செயற்குழுவும் இச்சட்டங்கள் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும் என ஆலோசனை வழங்கியுள்ளது.

அதன் பிரகாரம் அப்போது காணப்பட்ட தேசிய சபையினால் இச்சட்டங்களினை மீளவும் திருத்தம் செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக்குழுவினால் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவுக்கு

பல்வேறு தரப்பினர்களின் கருத்துக்களினைப் பெற்றுக்கொள்ளல், எண்ணக்கரு பத்திரமொன்றினூடாக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல், எண்ணக்கருப் பத்திரத்துடனான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு அவ் அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெறுதல் தொடர்பில் சட்ட வரைஞர் திணைக்களத்தினை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் அவர்களினால் ஆரம்ப வரைவினைத் தயாரிப்பதற்கு இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## முதியோர் இல்லங்களுக்கான விதி முறைகள் மற்றும் வழிகாட்டுதல்களினைத் தயாரித்தல்.

உலகின் முதியோர் மக்கள் தொகை அதிகரிப்பு நிகழ்வுக்கேற்ப, இலங்கையில் முதியோர் மக்கள் தொகை பரவலும் ஒப்பீட்டளவில் அதிகரித்து வருவதுடன், இவ்வாறு ஆதரவற்ற முதியோர் சமூகத்தின் பராமரிப்பினை வழங்குதல் மற்றும் அவர்களின் வலுவூட்டுதல் தொடர்பில் முதியோர்களுக்குச் சேவைகளினை வழங்கும் சகல நிறுவனங்களினையும் ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குமுறைகளினைத் தயாரிப்பதற்காக 2025.05.30 ஆந் திகதி நடைபெற்ற முதியோர்களுக்கான தேசிய சபையினால ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## மீண்டுவரும் ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.

### முதியோர்களுக்கு சுகாதார உதவி வழங்குதல்.

- 68 மூத்த பிரஜைகளுக்கு செவிப்புலக் கருவிகள், கண்வில்லைகள் மற்றும் மூக்குக் கண்ணாடிகளினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.85 மில்லியன்.
- முதியோர்களுக்கு 11 மருத்துவ முகாம்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 6.10 மில்லியன்.

### முதியோர்களினைப் பராமரித்தல்.

- மாலிகாதன்ன, பன்னல மற்றும் கதிர்காமம் முதியோர் இல்லங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்கான செலவு - நிதி முன்னேற்றம் ரூபா. 11.59 மில்லியன்.
- முதியோர் தங்களின் சொந்த வீடுகளில் வசிப்பதற்குத் தேவையான குறைவான வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளினை வழங்குவதற்கு அமுலாக்கப்படும் "வசதியான" (சுவபகசு) நிதி உதவிப் பிரேரணைகள் திட்டத்தின் கீழ் 614 முதியோர்களுக்கு நிதி உதவி வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 29.24 மில்லியன்.
- 7 முதியோர் இல்லங்களினைப் புதுப்பித்தல் மற்றும் உபகரணங்களினை வழங்குவதற்கு - நிதி முன்னேற்றம் ரூபா. 4.17 மில்லியன்.

### முதியோர் உரிமைகளினை ஊக்குவித்தல்

- 50,000 முதியோர் அடையாள அட்டைகளினை அச்சடித்தல், 21,281 முதியோர் அடையாள அட்டைகளினை வழங்குதல் மற்றும் 94 லெமினேட்டிங் கவர்களினைக் கொள்வனவு செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.73 மில்லியன்.

- முதியோர்களுக்கான தேசிய சபைக் கூட்டங்களினை நடாத்துவதற்கான 6 சபைக் கூட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.90 மில்லியன்.
- முதியோர் பராமரிப்புச் சபையினை நடாத்துவதுடன் தொடர்பிலான 94 வழக்கு அமர்வுகளினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.08 மில்லியன்.

## சமூக மற்றும் ஆன்மீக நிகழ்ச்சித் திட்டங்கள்

- முதியோர்களுக்கு 3 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் மற்றும் 2 கூட்டங்களினை நடாத்துதல். (முதியோர் தின நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் புத்தாண்டு வைபவ நிகழ்ச்சித் திட்டங்கள்) - நிதி முன்னேற்றம் ரூபா. 1.76 மில்லியன்.

## மூலதன ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.

- 66 பிரதேச செயலகங்களுக்கு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களினைப் பெற்றுக்கொள்ளல் - நிதி முன்னேற்றம் ரூபா. 4..14 மில்லியன்.

## முதியோர் நலன்புரி தேசிய நிதியத்தினூடாக அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.

- முதியோர் பராமரிப்புத் தொடர்பிலான 9 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.69 மில்லியன்.
- 10 முதியோர் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 19.22 மில்லியன்.
- திரிய பியச வீட்டுவசதிச் செயற்றிட்டத்தின் கீழ் 15 வீடுகளினை நிர்மாணித்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 9.81 மில்லியன்.
- 4 முதியோர் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கு உபகரணங்களினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 2.50 மில்லியன்.
- முதுமை தொடர்பில் இளைஞர் சமூகத்தினை விழிப்புணர்வூட்டும் 16 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.53 மில்லியன்.
- “ஆரோக்கியா” மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 734 முதியோர்களுக்கு மருத்துவ உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 15.28 மில்லியன்.
- முதியோர்களுக்கு 168 மதச் சுற்றுலாக்களினை ஒருங்கிணைப்புச் செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 14.51 மில்லியன்.
- 85 முதியோர்களுக்கு சுய தொழில் உதவியினை வழங்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 4.27 மில்லியன்.
- மாவட்ட அளவில் முதியோர் அமைப்புக்களினை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.3 மில்லியன்.
- முதுமை தொடர்பில் பாடசாலைச் சிறார்களினை விழிப்புணர்வூட்டும் 15 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.670 மில்லியன்.
- ஓய்வு பெறுவதற்கு முன்னரான 21 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.95 மில்லியன்.
- முதியோர்களின் ஆரோக்கியம் நிறைந்த வாழ்க்கை தொடர்பிலும் (யோகாப் பயிற்சி) மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு தொடர்பிலுமான 6 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 4.77 மில்லியன்.

- கிராம மட்டத்தில் 187 முதியோர் அமைப்புக்களினை வலுவூட்டுதல் - நிதி முன்னேற்றம் 18.59 மில்லியன்.
- தெகிஅத்தகண்டிய சரண முதியோர் இல்லத்தின் நிர்வாகச் செலவுகள் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.18 மில்லியன்.
- பதிவு செய்யப்பட்ட முதியோர் சங்கங்களுக்கு 1000 அச்சிடும் சான்றிதழ்களினை வழங்குதல் - ரூபா. 0.18 மில்லியன்.
- கதிர்காமம் முதியோர் இல்லத்தின் நிர்மாணிப்பு 100% நிறைவு மற்றும் கொள்வனவுச் செயற்பாடு 90% நிறைவு - நிதி முன்னேற்றம் ரூபா. 89.16 மில்லியன்.

# 4.5. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)

## அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 17 இலக்கச் சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தினூடாகவும் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் (திருத்தப்பட்ட) சட்டத்தினூடாகவும் நிறுவப்பட்டு அமுலாக்கப்பட்டுவரும் அரச நியதிச்சட்ட நிறுவனமொன்றாகும். அரச ஓய்வூதியமொன்றுக்கு உரித்தினைக் கொண்டிராத சுயதொழில் செய்பவர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைத் திட்டங்களினை அமுலாக்குதல் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் முதன்மையான கடமைப் பொறுப்பாகும்.

## நோக்கங்கள்

- சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அவர்களின் வயோதிபக் காலத்தில் அல்லது அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்படும்போது அக்காலத்தில் அவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் அவர்கள் மரணிக்கும்போது அவர்களினை சார்ந்து வாழ்பவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
- இளைஞர் யுவதிகளினை சுயதொழில்களினை மேற்கொள்ளுமாறு வலுவூட்டுதல், அவர்களின் இயலுமைகள், திறமைகளினை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

## கடமைப் பொறுப்பு

மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகளில் வேலை செய்பவர்களினைத் தவிர்த்து, பிற சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டமொன்றினை அமைத்தல் மற்றும் அப்பிரேரணைகள் திட்டத்தினை நிர்வகித்தல் மற்றும் முகாமை செய்தல் 2024 ஆம் ஆண்டு வரை அமுலாக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்பு என்புதுடன், அரசின் அனைத்துத் துறைகளிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும் ஓய்வூதியம் குறித்த விரிவான கொள்கையினை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு குடிமகனினையும் ஓய்வூதியத் திட்டத்தில் சேருவதற்கு ஊக்குவித்தல் என்ற புதிய அரசின் கொள்கைக்கமைவாக, இவ் ஆண்டு தொடக்கம் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் இந்நிறுவனத்தின் கடமைப் பொறுப்பாகும்.

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் – 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி,) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | **30.00** | **15.00** |
| மீண்டுவரும் | **218.00** | **139.95** |
| மொத்தம் | **248.00** | **154.95** |

**முதன்மையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்**

மீண்டுவரும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமுலாக்கப்படும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.

ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பிரேரணைகள் திட்டத்திற்கு புதிய அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல்.

புதிய உறுப்பினர் சேர்க்கைகளின் எண்ணிக்கை 37696 ஆகும்.

முதல் தவணையாக வசூலிக்கப்பட்ட தொகை ரூபா. 179.62 மில்லியனாகும்.

வசூலிக்கப்பட்ட பிந்தைய தவணைப் பணம் ரூபா. 186.89 மில்லியனாகும்.

பிந்தைய தவணைகளினைச் செலுத்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை 128,648 ஆகும்.

உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய மானியம் மற்றும் உறுப்பினர்களுக்கான பிற பயன்களினை வழங்குதல்.

37174 ஓய்வூதியர்களுக்கு ரூபா. 339.02 மில்லியன் ஓய்வூதியக் கொடுப்பனவினை வழங்குதல்.

பிற பயன்கள் கிடைக்கப் பெற்ற 1028 அங்கத்தவர்களுக்கு ரூபா. 24.66 மில்லியன் கொடுப்பனவினை வழங்குதல்.

விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு 1,998 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இளைஞர் குழுக்களுக்கு சுய தொழில்/தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

ஒறுகொடவத்த தொழிற் பயிற்சி நிலையத்தில் 147 மாணவர்களுக்கு நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல்.

**சமூகப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கு வெகுஜன ஊடகங்கள் மூலம் விளம்பரத் திட்டங்களினைச் செயலாக்குதல்.**

- Whatsapp மற்றும் Face Book ஐ மேம்படுத்தும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- யூ ரியூப் அலைவரிசை விளம்பரம்.
- 02 வானொலி நிகழ்ச்சித் திட்டங்களினை தொகுத்து வழங்குதல்.
- 03 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினை நடாத்துதல்.

## மூலதன நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்.

**பணியாட் தொகுதியினருக்கான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.**

- 4 குழுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 295 உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதல் மற்றும் 11 நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் தனிநபர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.

தகவல் தொழில்நுட்ப வசதிகளினை மேம்படுத்துதல்.

- கணனி உதிரிப்பாகங்களினைக் கொள்வனவு செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 2.27 மில்லியன்.

வாடிக்கையாளர் சேவையினை மேம்படுத்துவதற்கு அலுவலக வசதிகளினை மேம்படுத்துதல்.

- தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அலுவலக உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல் - (நிதி முன்னேற்றம் ரூபா. 6.50 மில்லியன்)

வாகனங்களினை மேம்படுத்துதல்.

- பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களுக்கான கொடுப்பனவு - நிதி மின்னேற்றம் ரூபா. 0.04 மில்லியன்.

பிரதான அலுவலக வளாகம் அமைந்துள்ள காணியின் விரிவாக்கம் மற்றும் மேம்பாடு.

மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளதுடன், உரித்து அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. உரித்து அறிக்கை வழக்கறிஞரினால் தயாரிக்கப்பட்டு வருகிறது

# 4.6. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)

## அறிமுகம்

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினூடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரில் உயர் கல்வி நிறுவனமொன்றாக நிறுவப்பட்டுள்ள இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழ் பட்டத்தினை வழங்குவதற்கு அதிகாரத்தினைக் கொண்ட நிறுவனமாக 2005 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், சமூகப் பணி (Social Work) தொடர்பிலான கல்வியினை வழங்கும் இலங்கையிலுள்ள ஒரேயொரு அரச நிறுவனமாகும்.

நிறுவனத்தின் மையப் பிரிவான நிர்வாக சபையின் (Governing Council) ஊடாக நிறுவனத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிதிசார் செயற்பாடுகள் அமுலாக்கப்படுகின்றன. நிர்வாக சபையின் கீழ் அமுலாக்கப்படும் கல்விசார் விவகார சபையினூடாக (Academic Affairs Board) நிறுவனத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல் வழங்குதல் இடம்பெறுகிறது.

## நோக்கங்கள்

- உகலளாவிய தேவைகள் மற்றும் புதுமைகளுடன் இணைந்த புதுமையான கல்வி மற்றும் வாழ்க்கைதொழில் திறன்களினை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கைத் தொழில் மேம்பாட்டினை வளர்த்தல்.
- நிலைபேறான தன்மை மற்றும் சமூக நீதியினை வளர்க்கும் சமூக அபிவிருத்தி மூலோபாயங்களின் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.
- சமூக நலன்புரி மற்றும் மேம்பாட்டு விளைவுகளினை மேம்படுத்தும் கொள்கைகளினை வடிவமைத்து செயற்படுத்துவதற்கு உதவுவதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சமூகக் கொள்கைகளினை மேம்படுத்துதல் மற்றும் நிபுணத்துவமான உளவளத்துனை சேவைகளினை வழங்குதல்.

## கடமைப் பொறுப்பு

- சமூகப் பணியில் தொழில்வாண்மையான கல்வியினை வழங்குதல்.
- சமூகப் பணிப் பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப் படிப்பினை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் சமூக அபிவிருத்திக் களத்துறைக்கான புதிய பட்டப் பாடநெறியினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். (சமூகவியலில் சிறப்புப் பட்டம், மானுடவியலில் சிறப்புப் பட்டம்,

உளவியல் மற்றும் உளவளத்துணையில் சிறப்புப் பட்டம் மற்றும் முதுமையியலில் சிறப்புப் பட்டம்)

- சமூகப் பணி தொடர்பிலான உள்ளூர் மற்றும் சர்வதேசப் பயிற்சிப் பாட நெறிகளினை நடாத்துதல்
- சமூகப் பணி, சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தித் துறையில் ஆய்வுகளினை முன்னெடுத்தல் மற்றும் பிரசுரங்களினை வெளியிடுதல்.
- சமூக நலன்புரித் துறையில் உளவளத்துணை சேவைகளினை நடாத்துதல்
- சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊழியர்களின் முகாமைத்துவம் மற்றும் வாழ்க்கைத் தொழில் திறன்களினை மேம்படுத்துதல்.
- சமூக நலன்புரிக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை வகுத்தல் மற்றும் அமுலாக்குதல் தொடர்பில் கௌரவ அமைச்சருக்கு தேவையான உதவியினை வழங்குதல்.

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் - 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் (சீதுவக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல்) | **180.00** | **19.32** |
| **மூலதனம் (ஸ்மார்ட் கிராமச் செயற்றிட்டம்)** | **7.00** | **1.23** |
| மூலதனம் (பிற) | **50.00** | **7.00** |
| மீண்டுவரும் | **249.00** | **125.90** |
| மொத்தம் | **486.00** | **153.45** |

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியம் – 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை.**

| | **ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் (ரூ.மி.)** | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| அபிவிருத்தி | **25.01** | **0.90** |
| மொத்தம் | **25.01** | **0.90** |

## மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.

### தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்காக சீதுவப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடத் தொகுதி

A மற்றும் B என்றவாறு இரு பகுதிகளினைக் கொண்ட இக்கட்டிட நிர்மாணிப்பு 2017.01.01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஒக்டோபர் மாதத்தில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் திட்டமிடல் காலப்பகுதி நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 1000 மில்லியனாகும். மொத்த நிர்மாணிப்பில் இதுவரையில் 0.25 இவ் ஆண்டில் முன்னெடுப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. (திரண்ட நிதி முன்னேற்றம் ரூபா. 991.06 மில்லியன், பௌதிக முன்னேற்றம் 98.44%) பணி நிறைவு பெற்றுள்ளது.

### ஸ்மார்ட் கிராமச் செயற்றிட்டம்

9 மாகாணங்களினைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 9 கிராமங்களுக்கு சமூகப் பணிப் பட்டம் தொடர்பிலான இறுதி ஆண்டு 18 மாணவர்கள் களப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என்பதுடன், கிராமப்புற நடவடிக்கைகளுக்கான சமூகப் பணிகளினை எளிதாக்குவது குறித்த அடிப்படைக் கல்வியானது அந்த 18 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. அந்த 18 மாணவர்களும் மார்ச் மாதத்தில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாணவர்களினால் கிராமங்களில் நிறுவப்பட்ட சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்குக் கிராம நடவடிக்கைகள் தொடர்பில் வசதிகளினை வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. சமூக உறுப்பினர்களின் பங்கேற்புடன் பொதுவான தேவைகளினை அடையாளம் காணுதல் அதேபோல கிராம மகளிர் மேம்பாட்டு அமைப்புக்களினை செயலாக்குதல், "தூய்மையான இலங்கை" செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் பிற ஆரம்ப விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. ஸ்மார்ட் விவசாயம் - **(**Smart Agriculture**)** தொடர்பிலான விவசாயிகளுக்கு நவீன முறைகள், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி மற்றும் வடிகால் திறன் குறித்த பயிற்சி, ஸ்மார்ட் பொருளாதாரம் - (Smart economy) தொடர்பிலான சந்தைப்படுத்தலுக்கு டிஜிட்டல் விற்பனை கூட்டாண்மை அல்லது ஒன்லைன்/பேஸ்புக் சந்தையினை உருவாக்குதல், ஸ்மாரட் இளைஞர் மேம்பாடு - (Smart Youth Development) தொடர்பில் பிரத்தியேக மற்றும் அரச சார்பற்ற தொழில் வாய்ப்புக்களினை விரிவுபடுத்துதல், ஸ்மார்ட் கல்வி - **(**Smart Education**)** ஸ்மார்ட் நூலகங்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியினை அறிமுகப்படுத்துதல் மற்றும் பள்ளிகளில் மின்னணு வளங்கலுக்கான அணுகலினை அதிகரித்தல், ஸ்மார்ட் சமூகப் பாதுகாப்பு - (Smart Social Protection)**,** சமூக நலன், நுண் கடன் வசதிகள் மற்றும் பெண்களினைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவி வழங்கி மகளிர் மேம்பாட்டுச் சங்கங்களினை செயலாக்குதல் இடம்பெற்றுள்ளது.

2025 யூன் மற்றும் யூலை மாதங்களில், சமூகச் செயற்றிட்ட முன்மொழிவுகளினை எழுதுவதற்குப் பயிற்சி மற்றும் சமூகக் கலந்துலையாடல் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதேபோல கிராமம் முழுவதும் தனியார் மற்றும் அரச துறைகளுடன் தொடர்புகளினை ஏற்படுத்தி தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதற்கு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. (ரூபா. 3.45 மில்லியன்)

## மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல்

- உபகரணங்களினைக் கொள்வனவு செய்தலின் கீழ் 10 லப்ரொப் கணனிகள், 2 டிஜிட்டல் திரைகள், கமரா மற்றும் நூலகப் புத்தகங்களினைக் கொள்வனவு செய்தல். (ரூபா. 5.023 மில்லியன்)

## மீண்டுவரும் ஒதுக்கீடுகளின் கீழ் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.

- சமூகப் பணி தொடர்பிலான பட்டப்படிப்புப் பாடநெறியினை 850 மாணவர்கள் தொடர்தல், சர்வதேச சமூகப் பணி தினத்தினைக் கொண்டாடுதல், வெளி வளதாரர்கள் 28 பேருக்குக் கொடுப்பனவினைச் செய்தல், 334 மாணவர்களின் நலன்புரி வசதிகளினை மேலோங்கச் செய்தல். (ரூபா. 15.82 மில்லியன்).
- 4 நூலகக் குழுக் கூட்டங்கள் மற்றும் 1 நூலக ஆலோசனைக் குழுக் கூட்டத்தினையும் நடாத்துதல், வசதிகளினை மேம்படுத்தலின் கீழ் தேவையான பொருட்களினை வழங்குதல். (ரூபா. 0.43 மில்லியன்)
- ஆராய்ச்சிப் பிரிவினூடாக ஆராய்ச்சித் திறனினை மேம்படுத்துவதற்கு 2 பணியாளர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், 4 சஞ்சிகைகள் மற்றும் 2 செய்திக் கதிர்களினை வெளியிடுதல், 2 மகாநாடுகளினை நடாத்துதல் (ரூபா. 0.92 மில்லியன்)
- பயிற்சிப் பிரிவினூடாக சமூக மட்டத்தின் உத்தியோகத்தர்களுக்கு 21 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், கள நிறுவன வசதியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் தொடர்பில் 2 வேலைத்திட்டங்களினை நடாத்துதல் (ரூபா. 0.70 மில்லியன்)
- மானுடவியல் மற்றும் முதியோர் கல்வி தொடர்பிலான திணைக்களம் மற்றும் உளவியல் மற்றும் உளவளத்துணைத் திணைக்களத்தினூடாக பிரேரிக்கப்பட்ட மானுடவியல் மற்றும் முதியோர் கல்வி தொடர்பில் புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், உளவியல் மற்றும் உளவளத்துணை தொடர்பில் புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரேரணைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் படிவத்தின் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. (ரூபா. 0.16 மில்லியன்)
- சமூக அறிவியல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சமூகவியல் தொடர்பிலான புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மீளாய்வுக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதனைத் திருத்தம் செய்தல், சமூகப் பணி தொடர்பிலான பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பிலான பாடநெறிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் படிவத்தின் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. (ரூபா. 0.09 மில்லியன்)

- பாலினச் சமத்துவம் தொடர்பிலான ஆய்வு நிலையத்தினூடாக பாலினச் சமத்துவம் மற்றும் சமத்துவம் குறித்த 4 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல் (ரூபா. 0.08 மில்லியன்).
- பாடத்திட்ட மேம்பாட்டு நிலையத்தினூடாக பாடத்திட்டம் தொடர்பிலான மீளாய்வு 03 வேலைத்திட்டங்கள் நடாத்தப்படுதல். (ரூபா. 0.04 மில்லியன்)
- பதிவாளர் பிரிவினூடாக 17 பரீட்சைகள் நடாத்தப்படுதல் (ரூபா. 0.143 மில்லியன்)
- தர உறுதி நிலையத்தினூடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கு 03 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 02 வேலைத்திட்டங்கள் நடாத்தப்படுதல்.
- 1 விளையாட்டு நிகழ்ச்சி, 01 பொழுதுபோக்கு நிகழ்ச்சி, தொழில் வழிகாட்டுதல் தலைமைத்துவப் பயிற்சி மற்றும் ஆன்மீகம்சார் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 3 நடாத்தப்படுதல்.

## நிறுவனத்தினூடாகக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ள பாடநெறிகள்.

### சமூக சேவைகள் கல்லூரி

சமூகப் பணியில் முதுகலைப் பட்டம் (2021/2022, 2022/2023, 2023/2024) 252 மாணவர்கள் கல்வியினைத் தொடர்தல், சமூகப் பணி தொடர்பிலான டிப்ளோமா (2023/2024) 17 மாணவர்கள் கல்வியினைத் தொடர்தல் (செலவு - ரூபா. 4.339 மில்லியன், வருமானம் - ரூபா. 8.051 மில்லியன்).

### பயிற்சிப் பிரிவு

உளவளத்துணை தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறி (2023/2024, 2024/2025), ஆங்கில மொழி தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறி (2024), உளவளத்துணை தொடர்பிலான உயர் டிப்ளோமாப் பாடநெறி 2025, உளவளத்துணை தொடர்பிலான டிப்ளோமா (2025), ஆங்கில மொழி தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறி 2025 நடாத்தப்படுதல் (செலவு - ரூபா. 8.523 மில்லியன், வருமானம் - ரூபா. 19.44 மில்லியன்)

### ஆராய்ச்சிப் பிரிவு

இலங்கை மகளிர் பணியகத்துடன் இணைந்து பாலின ஆய்வுகள் குறித்த சான்றிதழ் பாடநெறி (70 மாணவர்கள்) மற்றும் ஆராய்ச்சி முறை மற்றும் கல்வி ஆவணம் தொடர்பிலான சான்றிதழ் பாடநெறி (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) (140 மாணவர்கள்) நடாத்தப்படுதல் - (செலவு - ரூபா. 0.4 மில்லியன், வருமானம் ரூபா. 0.4 மில்லியன்)

# 4.7. கிராமிய மேம்பாட்டுப் பணியகம் (RDB)

## அறிமுகம்

2025 பெப்ரவரி மாதம் 10 ஆந் திகதிய மற்றும் அமைப/25/0150/820/004 என்ற இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், ஒருங்கிணைந்த கிராமிய அபிவருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்கும் மத்திய நிறுவனமாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் கிராமிய அபிவிருத்திப் பணியகம் நிறுவப்பட்டுள்ளது.

## நோக்கங்கள்

- சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குவதற்கு கிராமப்புறக் குடும்பங்கள்/சமூகங்களின் வருமான அளவினை அதிகரித்தல்.
- நுண், சிறு மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களினை ஊக்குவித்தல் மற்றும் ஆற்றல் மற்றும் திறனினை மேம்படுத்துதல்.
- அடிப்படை வசதிகளுக்கான (உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள்) அணுகலினை மேம்படுத்துதல்.
- சமூக அபிவிருத்தியினூடாக சமூகப் பிரச்சினைகளினைக் குறைத்தல்.

## கடமைப் பொறுப்பு

- பிரஜா சக்தி வறுமை ஒழிப்பு பிரச்சாரத்தின் கீழ் ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குதல்.
- கிராமப்புற மேம்பாட்டுத் துறை தொடர்பிலான செயற்றிட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும்போது அரசின் அமைச்சுக்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினைச் செய்தல்.
- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல், இயக்குதல் மற்றும் பின் தொடரும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
- தற்போதுள்ள கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தினை மேலும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

**அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை**

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 1,100.00 | 188.27 |

**முதன்மையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.**

### ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

- ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் 10606 கிராம மேம்பாட்டுத் திட்டங்களினை (VDP) தயாரித்தல் - நிதி முன்னேற்றம் ரூபா. 112.64 மில்லியன்.
- தெரிவு செய்யப்பட்ட 19 செயற்றிட்டங்களினை அமுலாக்குதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 26.90 மில்லியன் (செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள மொத்த செயற்றிட்டங்களின் எண்ணிக்கை – 184)
- செயற்றிட்ட சாத்தியக்கூறுகளுக்கான 23 சரிபார்ப்பு அறிக்கைகளினைத் தயாரித்தல். - நிதி முன்னேற்றம் ரூபா. 0.41 மில்லியன்.
- 9 பங்குதார் கூட்டங்களினை நடாத்துதல்.
- மாவட்டச் செயலாளர்களினை விழிப்புணர்வூட்டும் 2 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.
- தேசிய மட்டத்தில் பயிலுனர்களினைப் பயிற்றுவிக்கும் இரண்டு நாள் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல். (TOT) - நிதி முன்னேற்றம் ரூபா. 0.03 மில்லியன்.
- மாவட்ட மட்டத்தில் பயிலுனர்களினைப் பயிற்றுவிக்கும் 25 நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (TOT) - நிதி முன்னேற்றம் ரூபா. 1.42 மில்லியன்.
- தொகுதி மட்டத்தில் 630 பயிற்சி வேலைத்திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 40.16 மில்லியன்.

# 4.8. கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)

## அறிமுகம்

1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம், 1978 ஆம் ஆண்டிலிருந்து கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் மூலோபாயமொன்றாக, அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரங்கட்டப்பட்ட வறிய சமுதாயத்தின் சாத்தியமான பலன்களினை வெளிக்கொணர்வதன் மூலம் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் கூட்டுத்தன்மையினை வளர்த்துக் கொள்வதற்குப் பங்களிப்பு மேம்பாட்டு எண்ணக்கருவின் அடிப்படையிலான வேறுபட்ட செயற்பாட்டுப் பயிற்சி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக புதிய அபிவிருத்தி மூலோபாயமொன்றினை அறிமுகப்படுத்திய தேசிய நிறுவனமொன்றாகும். வறிய சமுதாயத்தின் சமூகப் பொருளாதாரச் செயற்பாட்டினூடாக அவர்கள் முகங்கொடுக்கும் பாதகமான நிலையினை மிகவும் சாதகமான நிலைமையாக முழுமையாக மாற்றுவதற்குத் தேவையான வலுவூட்டும் வினையூக்கச் செயல்முறை இந்நிறுவனத்தின் முன்னணியான கடமைப் பொறுப்பொன்றாகும்.

## நோக்கங்கள்

- சமூக மேம்பாடு பற்றிய அறிவினை முகாமை செய்தல்.
- சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனினை அதிகரித்தல்.
- புதுமையான வளர்ச்சி அணுகுமுறைகளினை அறிமுகப்படுத்துதல்.

## கடமைப் பொறுப்பு

- சமுதாய மேம்பாடு பற்றிய அறிவார்ந்த மற்றும் நிபுணத்துவ அறிவினை சமூகமயமாக்குதல்.
- அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து கிராமிய அபிவிருத்தியுடன் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.
- குடும்பங்கள் மற்றும் சமுதாயம்சார் அமைப்புக்களினை வலுவூட்டுவதற்கு நேரடியாகத் தொடர்புபடக்கூடியவாறு வெளிக்கள உத்தியோகத்தர்களின் ஆற்றலினை மேம்படுத்துதல்.
- கொள்கை வகுப்பாளர்கள்/அபிவிருத்தியாளர்களுக்கான தகவல்களினைத் தொகுத்தல்.
- சேவைகள் மற்றும் செயல்முறைகளின் தரத்தினை மேம்படுத்துதல்.
- புதிய அபிவிருத்தி அணுகுமுறைகளினை சமூகமயமாக்குதல்.

## அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 12.30 | 3.06 |
| மீண்டுவரும் | 59.70 | 35.78 |
| மொத்தம் | 72.00 | 38.84 |

## முதன்மையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.

- கிராமிய அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவு மற்றும் திறன்களினை மேம்படுத்துவதற்கு 10 களச் சுற்றுலாக்கள் மற்றும் 05 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 1.34 மில்லியன்.
- கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டுள்ள கள மட்ட உத்தியோகத்தர்களுக்கு அந்நிகழ்ச்சித் திட்டங்களின் நிலைத்தன்மையினை உறுதி செய்வதற்காக 5 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (கிராம அபிவிருத்தித் திட்டங்களினைத் தயாரித்தல், தொழில்முனைவோர் மேம்பாடு, சமூக அமைப்புக்களினை முகாமைசெய்தல், செயற்றிட்டங்களினைத் திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம், வீட்டு முகாமைத்துவம் போன்றன) - நிதி முன்னேற்றம் ரூபா. 0.85 மில்லியன்.
- கிராமப்புற சமூகத்தின் சமூக-பொருளாதார வலுவூட்டலினை மேம்படுத்துவதற்கு 06 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.29 மில்லியன்.
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களினை வலுப்படுத்துவதற்கு 04 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.11 மில்லியன்.
- கிராமங்களில் முன்னுரிமையான செயற்றிட்டங்களினை அடையாளம் காண்பதற்கு 254 கிராமப்புற மேம்பாடுத் திட்டங்களினை மீளாய்வு செய்தல்.
- பிரஜா சக்தி சஞ்சிகையின் முதலாவது தொகுதி வெளியீடு.
- தரணய செய்திக் கதிரின் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதியினை வெளியீடு செய்தல்.

- 3 திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (ஆராய்ச்சி முறை குறித்த பயிற்சி) - நிதி முன்னேற்றம் 0.08 மில்லியன்.
- மாகாண மற்றும் மாவட்ட மட்ட அரச உத்தியோகத்தர்களினை பிரஜா சக்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல்.
- **கட்டிடப் புனரமைப்புக்கான ரூ.** 4.786 **மில்லியன் நிதி ஒதுக்கீடுகள் கொழும்பு மற்றும் கண்டி மாவட்டச் செயலகங்களுக்கு மாற்றப்பட்டு**, **புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.**

# 4.9. உளவணத்துணைப் பிரிவு

## அறிமுகம்

சமூகம் எதிர்கொள்ளும் உளநலப் பிரச்சினைகள், உள ஏற்றத் தாழ்வுகள் மற்றும் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்கு, உளவியல் ஆலோசனை மற்றும் சிகிச்சைசார் முறைகளினைப் பயன்படுத்தி உளத்தினைச் சிறந்தவாறு கட்டியெழுப்புதல் இப்பிரிவினூடாக இடம்பெறுகிறது.

## நோக்கங்கள்

- உளநலக் கோளாறுகளின் பாதிப்பினைக் குறைப்பதன் மூலம் உளத்தினைச் சிறந்தவாறு கட்டியெழுப்புதல் மற்றும் உளத்தினை வலுவூட்டுதல்.

## கடமைப் பொறுப்பு

- நபர்கள் எதிர்கொள்ளும் உளநலப் பிரச்சினைகள், உளநலக் கோளாறுகள், மனநோய்கள் மற்றும் பல்வேறு உளவியல் சிக்கல்களினைக் கண்டறிந்து அந்த நிலைமைகளினைக் குறைப்பது தொடர்பான உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.
- சமுதாயத்தினை உள ரீதியில் வலுவூட்டுவதற்காக உளவியல் உளவளத்துணை தலையீட்டினை முன்னெடுத்தல்.
- உளநலக் கோளாறுகள் மற்றும் உளவியல் பிரச்சினைகளினைக் கொண்ட சேவைநாடியினர்களுக்குத் தரமான உளவளத்துணை சேவையினை வழங்குதல்.
- உளவளத்துணை சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மையாளர்களுக்கிடையே முறையான தொடர்பொன்றினை ஏற்படுத்துதல்.
- உளவளத்துணை சேவைகளினை வழங்குதல் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல்.

## அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடுகள் 2025 மற்றும் முன்னேற்றம் - 2025.09.30 ஆந் திகதி வரை

| | ஒதுக்கீடுகள் (ரூ.மி.) | முன்னேற்றம் (ரூ.மி.) |
|---|---|---|
| மூலதனம் | 10.00 | 6.77 |

**முதன்மையான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.09.30 ஆந் திகதி வரையிலான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்.**

- சமூக விரோத நடவடிக்கைகள் மற்றும் நடத்தையில் ஆபத்தினைக் கொண்ட பிள்ளைகளினை அடையாளம் காணுதல் மற்றும் 976 நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பரிந்துரைத்தல். (பயனாளிகளின் எண்ணிக்கை 71200)
- இணைய அடிமையாதல் மற்றும் போதைப்பொருள் பாவனையிலிருந்து பள்ளிக் குழந்தைகளினை விடுவிப்பதற்கான 471 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (பயனாளிகளின் எண்ணிக்கை - 48142) - நிதி முன்னேற்றம் ரூபா. 5.295 மில்லியன்.
- உளக் கோளாறுகளினை முன்கூட்டியே கண்டறிதல், பராமரிப்புக்கான பரிந்துரை மற்றும் தற்கொலை செய்வதைத் தடுப்பது தொடர்பில் பாடசாலைச் சிறார்களினை விழிப்புணர்வூட்டும் 740 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (பயனாளிகளின் எண்ணிக்கை - 44507).
- இளைஞர் சமூகத்தின் உளத்தினை வலுவூட்டுவதற்கான 952 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (உளநலத்தினைச் சிறந்தவாறு முன்னெடுத்தல், போதைப்பொருள் தடுப்பு, பாலியல் கல்வி மற்றும் தற்கொலையினைத் தடுப்பது தொடர்பிலான உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள்) பயனாளிகளின் எண்ணிக்கை - 47103.
- வீட்டு வன்முறைத் தடுப்புக் குறித்து 665 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - பயனாளிகளின் எண்ணிக்கை 25846.
- வீடு/குடும்பம் தொடர்பிலான பிரச்சினைகள் குறித்து 1154 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - (பயனாளிகளின் எண்ணிக்கை 45965).
- திருமணத்திற்கு முன்னரான 198 ஆலோசனைகளினை நடாத்துதல் - (பயனாளிகளின் எண்ணிக்கை - 8018).
- உளவியல் சமூகத் தலையீடு குறித்த சமூகத்தினை விழிப்புணர்வூட்டும் 304 குழு உளவத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல், (குழந்தைப் பருவத்தில் கர்ப்பம் தரித்தல், தற்கொலையினைத் தடுத்தல்) - பயனாளிகளின் எண்ணிக்கை 13864 - நிதி முன்னேற்றம் ரூபா. 0.615 மில்லியன்.
- உளநலக் கோளாறுகளினை முன்கூட்டியே கண்டறிதல், பராமரிப்புக்குப் பரிந்துரைத்தல் தொடர்பில் சமூகம் மற்றும் உத்தியோகத்தர்களினை விழிப்புணர்வூட்டும் 931 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பயனாளிகள் 47943).
- முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதியோர் இல்லங்களிலுள்ள டிமென்சியா உளக் கோளாறு மற்றும் முதிர்வடைந்த முதியோர்களுக்கு

423 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தளர்வுச் சிகிச்சைகள் மற்றும் செயற்பாடுகளினை முன்னெடுத்தல் - (பயனாளிகளின் எண்ணிக்கை 11739).

- அஸ்வெசும பயனாளிகளுக்கு உலக வங்கியினூடாக தனிப்பட்ட பலங்கள், சவால்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்புத் தெடர்பிலான 168 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (பயனாளிகளின் எண்ணிக்கை 9629) மற்றும் 251 தனிநபர் உளவளத்துணை அமர்வுகள் நடாத்தப்படுதல்.
- அஸ்வெசும பயனாளிகளுக்கு உலக வங்கியினூடாக தனிப்பட்ட பலங்கள், சவால்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்புத் தெடர்பிலான 27 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (பயனாளிகளின் எண்ணிக்கை 1422) மற்றும் 84 தனிநபர் உளவளத்துணை அமர்வுகளினை நடாத்துதல்.
- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் செயற்பாடுகளினை அடிப்படையாகக் கொண்ட 65 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 174 தனிநபர் உளவளத்துணை அமர்வுகளினை நடாத்துதல்.
- பிற அமைப்புக்களின் வேண்டுகோளின் பேரில் 407 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் மற்றும் 2462 தனிநபர் அமர்வுகளினை நடாத்துதல்.
- 19708 தனிநபர் உளவளத்துணை அமர்வுகளினை நடாத்துதல் மற்றும் 5169 தலையீட்டுத் திட்டங்களினைத் தயாரித்தல்.
- மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களிலுள்ள அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சு உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தச் செயறபாடு சார்ந்த மனநிறைவு மற்றும் 522 தளர்வு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல். (பயனாளிகளின் எண்ணிக்கை 26047)
- 2291 தொலைபேசி அழைப்புக்கள் மூலம் தொலைபேசி உளவளத்துணை சேவையினை வழங்குதல்.
- உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு 2 திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் - நிதி முன்னேற்றம் ரூபா. 0.965 மில்லியன்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அங்கவீனர் இல்லங்களிலுள்ள அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான செயற்பாடுகள் 138 ஆரம்ப உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல் (பயனாளிகளின் எண்ணிக்கை - 5108).

# 4.10 உலக உணவு நிகழ்ச்சித் திட்ட ஒத்துழைப்புக்கான கூட்டாண்மைச் செயலகம்.

## அறிமுகம்

உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (WFP) என்பது 1968 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் நிறுவப்பட்ட அரச அனுசரணையுடன் அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டமொன்றாகும். 2023 – 2027 மூலோபாயத் திட்டத்தின் கீழ் இதுவரையில் இலங்கையில் உலக உணவு நிகழ்ச்சித் திட்டம், வெற்றிகரமாக உணவுப் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு செயலாக்கப்படுகிறது. இம் மூலோபாயத் திட்டம் 105 அமெரிக்க டொலர் மில்லியன் பெறுமதியினைக் கொண்ட ஐந்தாண்டு நிகழ்ச்சித் திட்டம் என்பதுடன், அவசரகால சூழ்நிலைகளுக்கு உடனடியாக பிரதிபலிப்பினைக் காட்டுதல், ஓரங்கட்டப்பட்டவர்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவையினைப் பூர்த்தி செய்தல், காலநிலை மாற்றத்திற்கு நீண்டகால மீள்தன்மை மற்றும் நிறுவனம்சார் திறனினை வளர்ப்பதன் மூலம் பேண்தகு வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களினை அடைவதற்கு 2025 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் WFP ஒத்துழைப்புக்கான கூட்டாண்மைச் செயலகம் (PSWFPC), கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மிகவும் திறமையாகச் செயற்படுவதற்காக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் அமுலாக்கப்படுகிறது. இச்செயலகம், உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துடன் (WFP) இலங்கை அரசினை ஒருங்கிணைப்புச் செய்கின்ற முதன்மையான நிலையம் என்பதுடன், உரிய நிகழ்ச்சித் திட்டங்களினை அடி மட்டத்தின் தேசிய முன்னுரிமைகளுக்கமைவாக சீரமைத்தல், விளைத்திறனுடன் செயலாக்குதல். பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மை மற்றும் பயனுள்ள கண்காணிப்பினை உறுதி செய்கிறது.

2025 ஆம் ஆண்டு தொடர்பில், மூலோபாயத் திட்ட நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு WFP வருடாந்த மானிய உதவி ரூபா. 1.250 மில்லியன் என்பதுடன், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்தல், விளிம்புநிலை மக்களுக்கான ஊட்டச்சத்தினை மேம்படுத்துதல் மற்றும் பேரிடரினைத் தாங்கும் சக்தியினை வலுப்படுத்துதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு இலங்கை அரசிடமிருந்து ரூபா. 550 மில்லியன் பங்களிப்பு, 2025 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## முக்கிய மூலோபாய முடிவுகள்

1. நெருக்கடி நிலைக்கான தீர்வு - நெருக்கடிகளின்போதும் மற்றும் அதற்குப் பின்னரும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதிசெய்தல்.

2. மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து - ஊட்டச் சத்து உணர்திறன் மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களூடாக வாழ்க்கையின் முதல் 8,000 நாட்களில் கவனம் செலுத்தி ஊட்டச்சத்தினை மேம்படுத்துதல்.

3. ஈடுகொடுக்கும் வல்லமையினைக் கட்டியெழுப்புதல் - இயற்கை ஆபத்துக்கள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் சமூக ஆபத்தினைக் குறைத்தல்.

4. நிறுவனத்தினை வலுப்படுத்தல் - மீள்தன்மை கொண்ட உணவு முறைகளினை மேம்படுத்துதல் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்கு தேசிய நிறுவனத் திறனினை மேம்படுத்துதல்.

அதன் பிரகாரம் இந் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 1900 மில்லியன் ஒதுக்கீடொன்று ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025.09.30 ஆந் திகதி வரை நிதி முன்னேற்றம் ரூபா. 372.52 மில்லியன் என்பதுடன், நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறாகும்.

| | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் | முக்கிய பங்களிப்பு | முக்கிய சாதனைகள் (2025) |
|---|---|---|---|
| 01 | உள்ளூர் பாடசாலை உணவு தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் (Home-Grown School Feeding – HGSF)<br><br>மாவட்டம்: அனுராதபுரம், பொலன்னறுவை. கிளிநொச்சி, மாத்தளை, மட்டக்களப்பு, | பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்தான உணவுகளினை வழங்குதல், உள்ளூர் விவசாயிகளுடன் தொடர்புகளினை வலுப்படுத்துதல். | • 1,350+ பாடசாலைகளின் 290,000 பிள்ளைகளினை உள்வாங்கும் வகையில்,<br>• 1,800 தோட்டங்கள், 2,000 கோழிப் பண்ணைகள், 3,500 உணவு வழங்குனர்களுக்கு உதவுதல்.<br>• சூரிய சக்தியில் இயங்கும் 10 பாடசாலை சமையலறைகள் புதுப்பிக்கப்பட்டன, (கிளிநொச்சி)<br>• கோழித் தீவனத் தொழிற்சாலையொன்று |

| | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் | முக்கிய பங்களிப்பு | முக்கிய சாதனைகள் (2025) |
|---|---|---|---|
| | மொனராகல, வவுனியா, நுவரெலியா. | | நிறுவப்பட்டுள்ளது (பல்லேபொல)<br>• ஊட்டச்சத்து விழிப்புணர்வு மற்றும் சமூக நடத்தையினை மாற்றும் தொடர்பாடல் வேலைத்திட்டம் நடாத்தப்படுதல். |
| **02** | அரிசி விநியோகத் திட்டம் | தேசியப் பாடசாலை உணவுத் திட்டத்தில் செறிவூட்டப்பட்ட அரிசியினை ஒருங்கிணைப்பதன் மூலம் நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுகளினை நிவர்த்தி செய்தல். | • 12 மாவட்டங்களிலுள்ள 537,00 குழந்தைகளினைச் சென்றடைதல்.<br>• கலன்குட்டிய அரிசி பதப்படுத்தும் அலகு மற்றும் களஞ்சிய வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.<br>• தேசிய உணவு மேம்பாட்டுச் சபையில் நிர்மாணிக்கப்பட்ட ஆய்வகம் மற்றும் அலுவலகம்.<br>• தனியார் பிரிவின் கூட்டாண்மை மூலம் கலவை எந்திரங்கள் நிறுவப்பட்டன.<br>• முதலீடு: உற்பத்தித் திறனினை மேம்படுத்துவதற்கு ரூபா. 250+ மில்லியன். |
| **03** | சொத்துக்களுக்கான உணவு உதவி (FFA) - கிராமப்புற ஊழியப் படையினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நீர்ப்பாசன அமைப்புக்களினைப் | சமூகச் சொத்து உருவாக்கத்திற்கு நிதி/ உணவு உதவி வழங்குதல். | • கிளிநொச்சி மற்றும் மாத்தளையிலுள்ள 866 வீடுகளுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. (மாவட்டமொன்றுக்கு ரூபா. 37.5 மில்லியன்)<br>• 13 சொத்துக்கள் (குளம், கால்வாய்கள், நீர்ப்பாசன |

| | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் | முக்கிய பங்களிப்பு | முக்கிய சாதனைகள் (2025) |
|---|---|---|---|
| | புதுப்பித்தல். | | அமைப்புகள், விவசாய சாலைகள்) உருவாக்கப்பட்டுள்ளன. |
| **04** | தேசிய ஊட்டச்சத்து துணையுணவு - திரிபோச | தேசிய திரிபோச துணையுணவு, தரம் மற்றும் உற்பத்தியினை மேம்படுத்துதல். | • அரிசி சார்ந்த மாற்று செய்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br>• 6-36 மாதக் காலப்பகுதிக்கு அரிசி - சோயா கலவை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br>• நவீன இயந்திரங்களில் முதலீடு (WFP 50% + அரசின் 50%) |
| **05** | Adaptation for Resilience -ADAPT4R பிராந்தியத் திட்டம் (இந்தியா மற்றும் இலங்கை) | விவசாயிகளுக்கான இறுதி மைல் காலநிலை சேவைகளினை (LMCS) வலுப்படுத்துதல்; தழுவல் திறனினை மேம்படுத்துதல். | • நேரடிப் பயனாளிகள் 15,500 மற்றும் மறைமுகப் பயனாளிகள் 640,720 (பெண்கள் > 50%) உள்வாங்கப்பட்டுள்ளனர்.<br>• பிராந்தியக் காலநிலை ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.<br>• பாலின சமத்துவம் மற்றும் காலநிலைக்கேற்ற வாழ்வாதாரங்களினை ஊக்குவித்தல். |
| **06** | எதிர்பார்க்கப்பட்ட செயற்றிட்டம் (AA) – அம்பாறை | வெள்ளப்பெருக்குக்கான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புக்கள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினை வலுப்படுத்துதல். | • சாத்தியக் கற்கை ஆய்வு மற்றும் பங்குதாரர்களின் பங்கேற்பு நிறைவு பெற்றுள்ளது.<br>• முன்மாதிரி இடங்கள்: சாமபுர, சேனநாயக்கபுர, மிகிந்துபுர.<br>• 40 மாவட்ட |

| | நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் | முக்கிய பங்களிப்பு | முக்கிய சாதனைகள் (2025) |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.<br>• சமூகத் தரவு சேகரிப்பு : வீடுகள் 100+<br>• மாவட்ட AA குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது;<br>• திடீர் வெள்ள மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது. |
| **07** | மாவட்ட உணவுப் பாதுகாப்பு வலையமைப்பு (DFSN)<br><br>மாவட்டம்:<br>திருகோணமலை,<br>மன்னார், முல்லைத்தீவு,<br>கிளிநொச்சி,<br>யாழ்ப்பாணம்,<br>மொனராகல,<br>அனுராதபுரம், வவுனியா. | மாவட்டச் செயலகப் பிரிவு மட்டத்தில் நிலைபேறான உணவுப் பாதுகாப்பு வலையமைப்பொன்றினை உருவாக்குதல். | • DFSN வலையமைப்பு மற்றும் செயலூக்கமான பணிக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.<br>• ஐந்து மாவட்டங்களில் மூன்றுநாள் பகுப்பாய்வுப் பயிற்சி நடாத்தப்பட்டது.<br>• காலாண்டு உணவுப் பாதுகாப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (யாழ்ப்பாணம்)<br>• தலையீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் உணவுப் பாதுகாப்பு வரைபடங்கள் மற்றும் அறிக்கைகள். |

# 4.11 வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள் மற்றும் பிற வெளிநாட்டுத் தொடர்புகள்.

## 4.11.1 வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள்

**கடன் அட்டை**

பலபரிமாண வறுமையினை எதிர்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கையினைக் குறைக்கும் நோக்கத்துடன் அஸ்வெசும பயனாளி குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் இவ்வமைச்சின் கீழுள்ள சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் முதன்மையான நிகழ்ச்சித் திட்டமொன்று என்பதுடன், அதன் 2 முன்னோடியான செயற்றிட்டங்களாக உலக வங்கி கடன் உதவி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் இதுவரையில் அமுலாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**முன்னோடிச் செயற்றிட்ட இலக்கம் 01 - ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவிச் செயற்றிட்டம்**

அஸ்வெசும பயனாளிகளினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடியான செயற்றிட்டமொன்றாக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியினைப் பயன்படுத்தி அஸ்வெசும பயனாளிகளுக்கிடையே, 12800 வறிய மற்றும் கடுமையான வறிய குடும்பங்களினை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு இச்செயற்றிட்டம் அமுலாக்கப்படுகிறது. இச் செயற்றிட்டத்திற்கான முன்னேற்றம் பக்க இலக்கம் 8 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

முன்னோடிச் செயற்றிட்ட இலக்கம் 02 - உலக வங்கி நிதியுதவிச் செயற்றிட்டம்

அஸ்வெசும பயனாளிகளினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னோடியான செயற்றிட்டமொன்றாக உலக வங்கி நிதியுதவியினைப் பயன்படுத்தி அஸ்வெசும பயனாளிகளுக்கிடையே, 10,975 வறிய மற்றும் கடுமையான வறிய குடும்பங்களினை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு இச்செயற்றிட்டம் அமுலாக்கப்படுகிறது. இச் செயற்றிட்டத்திற்கான முன்னேற்றம் பக்க இலக்கம் 8, 9 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

**மானியக் கூறு**

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவின் கீழ் அமெரிக்க டொலர் 1.98 மில்லியன் மானியக் கூறு அமுலாக்கப்படுவதுடன், அதனை 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2026 ஆம் ஆண்டு வரை

அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் இவ்வமைச்சின் கீழுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகம், சமூக சேவைகள் திணைக்களம், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம், இலங்கை மகளிர் பணியகத்தினூடாக செயற்றிட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

இச் செயற்றிட்டத்தின் கீழ் இவ்வமைச்சுக்குரிய நிறுவனங்களுக்கு ரூபா. 146.985 மில்லியன் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022.09.09 ஆந் திகதி தொடக்கம் 2025.09.30 ஆந் திகதி வரை ரூபா. 50.199 மில்லியன் நிதி முன்னேற்றமொன்று சுவீகரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான பௌதிக முன்னேற்றம் பின்வருமாறாகும்.

- அக்குரஸ்ஸ சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்குத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 30 பராமரிப்பு நிலையங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 11 பராமரிப்பு நிலையங்களினைப் பழுதுபார்க்குச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.
- 550 அங்கவீனமுற்ற நபர்களுக்கு 11 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- அங்கவீனமுற்ற சிறார்களுக்கு 472 பாடசாலை உபகரணத் தொகுதி வழங்கப்பட்டுள்ளது.
- 61 அங்கவீனமுற்ற நபர்களுக்கு நடமாடும் விற்பனை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.
- 721 அங்கவீனமுற்ற நபர்களுக்கு தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.
- 20 அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுய தொழில் உதவி வழங்கப்பட்டுள்ளது.
- அங்கவீனமுற்ற நபர்களினைப் பாதுகாத்தல் தொடர்பில் அவர்களின் வீடுகளிலுள்ள 1477 நபர்களுக்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 4.11.2 வெளிநாட்டுத் தொடர்புகள்

**வறுமை ஒழிப்புக் குறித்து BIMSTEC (Bay Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation) நிபுணர் குழுவின் 4 வது கூட்டம் - 2025.10.09 மற்றும் 10 இரு தினங்கள்**

வறுமை ஒழிப்புக்கான BIMSTEC அமைச்சர்களின் கூட்டம், BIMSTEC உயர் அதிகாரிகளின் கூட்டம், BIMSTEC நிபுணர் குழுவின் கூட்டம் என்றவாறு BIMSTEC பிராந்திய நாடுகளுடன் இணைந்து வருடாந்த உச்சி மகாநாடுகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதில் BIMSTEC நிபுணர் குழுவின் 4 வது கூட்டம் பத்தரமுல்ல, Waters Edge களியாட்ட விடுதியில் 2025.09 மற்றும் 10 இரு தினங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

வறுமை ஒழிப்புத் தொடர்பிலான செயற்றிட்டமொன்றினை தயாரிப்பது உட்பட, BIMSTEC பிராந்திய நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பின் மூலம் வறுமை மற்றும் வறுமை ஒழிப்புக்காகச் செயற்படுவதற்காக தொடர்பாடல் செயல்முறைகள், ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்யும் மூத்த உத்தியோகத்தர்களினை உள்ளடக்கி வறுமை ஒழிப்புத் தொடர்பிலான BIMSTEC நிபுணர் குழுக்கள் வருடத்திற்கு ஒருமுறை கூடுகின்றன.

2024 ஆம் ஆண்டின் நேபாளத்தின் காத்மண்டுவில் நடைபெற்ற மூன்றாவது மகாநாட்டில் முன்மொழியப்பட்டவாறு 4 வது மகாநாடு 2025..09.10 ஆந் திகதி இரு தினங்கள் நடைபெற்றன. பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியன BIMSTEC இன் உறுப்பு நாடுகள் என்பதுடன், இலங்கையில் நடைபெற்ற 4 வது மகாநாட்டிற்கு மியன்மாரிலிருந்து ஒரு உத்தியோகத்தர் மற்றும் தாய்லாந்திலிருந்து 05 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர் என்பதுடன், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, நேபாளம் ஒன்லைன் ஊடாக Zoom வழியாகக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

இம்மகாநாடு BIMSTEC செயலகத்தினால் நடாத்தப்பட்டதுடன், BIMSTEC செயலகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டு இரு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் மேலதிக செயலாளர், திரு, காமிணி விஜேசிங்க அவர்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்ட இம் மகாநாட்டிற்கு இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்ச்சித் திட்டம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இச்செயற்பாடுகள் தொடர்பில் ஈடுசெய்யப்பட்ட செலவு ரூபா. 2.39 ல்லியன் ஆகும்.

## வறுமை ஒழிப்பு மற்றும் பேண்தகு அபிவிருத்தி தொடர்பில் அரசுகளுக்கிடையிலான நிபுணர் குழுவின் முதலாவது கூட்டம்

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடனான சீரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் தொடர்பிலான 2024 SAARC செயற்றிட்டத்தினை மீளவும் மதிப்பாய்வு செய்தல் குறித்து SAARC – ADB இன் ஆலோசனை வேலைத்திட்டம், 2024 ஒக்டோபர் மாதம் 21 மற்றும் 22 ஆந் திகதிகளில் நேபாளத்தின் காத்மண்டுவில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் வறுமை ஒழிப்பு மற்றும் பேண்தகு அபிவிருத்தி குறித்து அரசுகளுக்கிடையிலான நிபுணர் குழுவின் முதலாவது கூட்டத்திற்கு விருந்தோம்பலினைச் செய்வதற்கு இலங்கை ஒப்புக்கொண்டது. அதன் பிரகாரம் அக்கூட்டம் 2025 பெப்ரவரி மாதம் 18 மற்றும் 19 ஆந் திகதிகளில் கொழும்பு அமாரி களியாட்ட விடுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் நடாத்தப்பட்டது. இந்தியாவைத் தவிர அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு, SAARC செயலகம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து இக்கூட்டம் ஒழுங்கமைப்பட்டது. இது தொடர்பில் SAARC நாடுகள், SAARC செயலகம் மற்றும் ADB பிரதிநிதிகள் உட்பட மொத்தம் 34 பேர் கொண்ட குழு பங்கேற்றுள்ளது. உலகளவில் SAARC இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளைக் கருத்திற் கொண்டு SAARC பிராந்தியத்திற்காக பரிசீலிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள், வறுமை ஒழிப்புக்கான SAARC திட்டம், SAARC அபிவிருத்தி இலக்குகள், பரிசீலிக்கப்பட்ட SDG செயலாக்குதல் தொடர்பிலான முன்னுரிமைக் கொள்கைகள், பரிசீலிக்கப்பட்ட SDG தொடர்பிலான கண்காணிப்புப் பொறிமுறை மற்றும் சரியான நேரத்தில் மதிப்பீடு உள்ளடக்கப்பட்ட இறுதி வரைவு அறிக்கை இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், SAARC உறுப்பு நாடுகளின் வறுமையினை ஒழிப்பதற்கான முக்கிய தீர்மானங்கள் இதில் எடுக்கப்பட்டன. ஆரம்பச் செலவுகள் ADB ஆல் ஈடுசெய்யப்பட்டுள்ளதுடன், இக்கூட்டத்திற்கு இவ்வமைச்சினால் ரூபா. 0.64 மில்லியன் செலவு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

# 4.12 பிற கண்காணிப்புப் பிரிவுகள்

## நிர்வாகப் பிரிவு

அமைச்சு மற்றும் இணை நிறுவனங்களின் மனித வளங்கள் மற்றும் பௌதிக வள முகாமைத்துவம் தொடர்பிலான தாபன விதிக்கோவைகள், சுற்றுநிரூபங்களுக்கிணங்க மற்றும் சூழ்நிலைகளுக்கமைவாகச் செயற்படுவதற்காக நிர்வாகப் பிரிவு அமுலாக்கப்படுகிறது. நிர்வாகப் பிரிவினூடாக பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும் நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு விளைத்திறனான சேவையொன்று வழங்கப்படுகிறது.

- அமைச்சினதும் மற்றும் அமைச்சுக்கு உரித்தான சகல நிறுவனங்களின் பதவியணிக்கான நிறுவனம்சார் மற்றும் நிர்வாகம்சார் செயற்பாடுகளினைக் கண்காணித்தல்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியினை வழங்குவதனூடாக மனித வளத் திறனினை மேம்படுத்துதல்.
- அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், சட்ட வரைவுகள் போன்றவற்றினைச் சரியானவாறு முன்வைப்பதனூடாக கொள்கை வகுத்தலுக்குப் பங்காற்றுதல்.
- தேவையான மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மனித வள மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

அதன் பிரகாரம், மனித வள மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கலின் கீழ் 7 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், 422 உத்தியோகத்தர்களின் பங்குகொள்ளலுடனும் மற்றும் 2 திறன் மற்றும் அறிவு வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 98 உத்தியோகத்தர்களின் பங்குகொள்ளலுடனும் நடாத்தப்பட்டன.

## அபிவிருத்திப் பிரிவு

இவ்வமைச்சின் கீழ் மூன்று அபிவிருத்திப் பிரிவுகள் செயலாக்கப்படுகின்றன. அபிவிருத்திப் பிரிவின் முதன்மையான கடமைப் பொறுப்பாவது, அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நோக்கங்களினை அடைவதற்கு ஆலோசனைகளினை வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பினை முன்னெடுத்தல் என்பனவாகும். அதில் கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதார நல்வாழ்வினை மேம்படுத்தும் செயல்முறையுடன் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும் நிறுவனங்கள் மேலதிக செயலாளர் (கிராம அபிவிருத்தி) ஊடாகவும், சமூகப் பாதுகாப்புத் தேவையான மக்கள் தொடர்பில் இனங்காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும் நிறுவனங்கள் மேலதிக செயலாளர் (சமூகப் பாதுகாப்பு)

ஊடாகவும் மற்றும் சமூக வலுவூட்டுகை செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மேலதிக செயலாளர் (சமூக வலுவூட்டுகை) ஊடாகவும் கண்காணிப்பு இடம்பெறுகிறது.

## கணக்குகள் பிரிவு

செயற்பாடு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வருடாந்த ஒதுக்கீடுகளினை வழங்குதல், முகாமை செய்தல், கொடுப்பனவுகளினை முன்னெடுப்பதுடன், அரச கணக்குகளினை வெளிப்படைத் தன்மையுடன் பராமரித்தல், நிதிப் பிரமாணங்களினூடாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை ஒழுக்கத்துடன் முன்னெடுத்துச் செல்லுதல் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பிரிவு கணக்குகள் பிரிவாகும். அமைச்சுக்குரிய கணக்கு நடவடிக்கைகள் மற்றும் ஒட்டுமொத்த கொள்முல் செயல்முறை இடம்பெறுவதற்கு மேலாக திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் சபைகளின் கணக்குகளினை கண்காணித்தலும் இடம்பெறுகிறது.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, அமைச்சின் செயலாளருக்கு நேரடியாகப் பொறுப்பினைக் கூறும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கீழ் செயலாக்கப்படுவதுடன், அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சேவைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினைத் தரமானதாகவும் மற்றும் வினைத்திறனாகவும் முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான நிதியினைக் கணக்காய்வு செய்தல், செயற்தறின் கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு, சுற்றுச்சூழல் கணக்காய்வு, திட்ட நிர்வாகக் கணக்காய்வு மற்றும் கவனத்திற்குக் கொள்ளக்கூடிய துறைகளினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினை முன்னெடுப்பதனூடாக, எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்குகளினை எட்டுவதற்கு வழிகாட்டுதல்களினை வழங்குவதும் இடம்பெறுகிறது.

## திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயப் பரப்புக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்றிட்டங்களினைத் திட்டமிடுவதற்குத் தேவையான வசதிகளினை வழங்குதல், அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயற்படுத்துதல், முன்னேற்றத்தினை முகாமை செய்தல் பிற நேர் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தலும் இப்பிரிவின் கீழ் இடம்பெறுகிறது. மேலும் வெளிநாட்டு உதவியின் கீழ், அமுலாக்கப்படும் செயற்றிட்டங்களினை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்யும் நடவடிக்கையும் இப்பிரிவினூடாக இடம்பெறுகிறது.

## 4.13 அமைச்சு மற்றும் பிற நிறுவனங்களினால் அடையப் பெற்ற விசேட சாதனைகள்.

1. இலங்கையில் முதியோர்களுக்கான தேசியக் கொள்கையினைத் தயாரித்து 2025 ஒக்டோபர் 01 ஆந் திகதி வெளியீடு செய்தல்.
2. குறைந்த வருமானம் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களுக்கு மருத்துவ உதவியாக வழங்கப்பட்டுள்ள ரூபா. 20,000 நிதியுதவியினை ரூபா. 30,000 வரை அதிகரித்தல்.
3. குறைந்த வருமானம் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களுக்கு (60 வயதிற்குக் குறைந்த) செயற்கைக் கால்கள், காற்று மெத்தைகள், தண்ணீர் மெத்தைகள் போன்ற விசேட உபகரணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா. 20,000 நிதியுதவியினை ரூபா. 50,000 வரை அதிகரித்தல்.
4. குறைந்த வருமானம் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களுக்கு செவிப்புலக் கருவிகளினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா. 35,000 நிதியுதவியினை ரூபா. 50,000 வரை அதிகரித்தல்.
5. அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அங்கவீனமுற்ற நபர்கள் கல்வி கற்று வரும் விசேடக் கல்வி அலகுகளுக்கு விளையாட்டுக்கள் மற்றும் இசை உபகரணங்களினைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா. 50,000 நிதியுதவியினை ரூபா. 100,000 வரை அதிகரித்தல்.
6. குறைந்த வருமானத்தினைக் கொண்ட அங்கவீனமுற்ற நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா. 40,000 சுயதொழில் உதவியினை ரூபா. 50,000 வரை அதிகரித்தல்.
7. வீடொன்றினைக் கொண்டிராத அங்கவீனமுற்ற நபர்களுக்குப் புதிய வீடொன்றினைக் கட்டுவதற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா. 700,000 நிதியுதவியினை ரூபா. 1,000,000 வரையும் புதுப்பிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா, 300,000 நிதியினை ரூபா. 500,000 வரையும் அதிகரித்தல்.
8. அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுகாதார வசதிகளுக்காக வழங்கப்பட்டுள்ள ரூபா. 100,000 நிதியுதவியினை ரூபா. 150,000 வரை அதிகரித்தல்.
9. இவ் வருடத்திலிருந்து அரச உத்தியோகத்தர்களுக்கு 06 மாதகால சைகை மொழிப் பாடநெறியினை அமுலாக்குதல்.
10. குடிசன மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்துடன் இணைந்து அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான தரவுத் தளமொன்றினை நிறுவும் செயற்பாடுகளினை ஆரம்பித்தல்.
11. ஒரே நேரத்தில் சுமார் 125 முதியோர்களினைப் பராமரிக்கக்கூடியவாறு கதிர்காமப் பகுதியில் புதிய இல்லமொன்றினை நிறுவுதல்.
12. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய விளையாட்டு வைபவத்தினை 2025.04.03 ஆந் திகதி தியகம விளையாட்டரங்கில் நடாத்துதல்.
13. JICA-வின் தொழில்நுட்ப உதவியுடன் ESPD (மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு ஆதரவு) திட்டத்தின் மூலம் இந்த ஆண்டு 323 மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
14. "கனவு இலங்கை நிகழ்ச்சித் திட்டம்" - மாற்றுத்திறனாளிகளை வேலைவாய்ப்பில் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தொடங்கப்பட்ட ஒரு திட்டம். தற்போது, இந்த திட்டம் 87 பிரதேச செயலாளர் பிரிவுகளில் செயல்படுத்தப்படுகிறது.

15. 2025.08.05 ஆந் திகதி சித் றூ 2025 அங்கவீனமுற்ற நபர்களின் கலாசார நிகழ்வினை அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் தாமரைத் தடாக அரங்கில் நடாத்துதல்.
16. 2025.09.23 ஆந் திகதி தேசிய சைகை மொழித் தினக் கொண்டாட்டத்திற்கு இணையாக செவித்திறன் மற்றும் பேச்சுக் குறைபாடுள்ள நபர்களுக்காக ஒரு வாட்ஸ்அப் தொலைபேசி இலக்கத்தினை அறிமுகப்படுத்துதல். (தொலைபேசி இலக்கம் - 0706116000)
17. 2025.10.15 ஆந் திகதி நடைபெற்ற சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினக் கொண்டாட்ட வைபவத்திற்கு நிகராக விழிப்புலனற்ற நபர்களுக்கான பாட்டுப் போட்டியினை நடாத்துதல்.
18. ஓட்டிசம் மற்றும் பிற அங்கவீனத்தினைக் கொண்ட பிள்ளைகளுக்கு மாத்தறை, திருகோணமலை, கேகாலை, கம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, அனுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் திறன் விருத்தி பகல் நேர நிலையங்களினை நிர்மாணிப்பதை ஆரம்பித்தல்.
19. உலக உளநல தினத்திற்கு இணையாக 2025.10.16 ஆந் திகதி உளவளத்துணைக் கொண்டாட்ட வைபவத்தினை நடாத்துதல்.
20. சமூக வலுவூட்டுகை நிகழ்ச்சித் திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியின் முன்னோடியான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதுடன், திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் தேசிய நிகழ்ச்சித் திட்டமாக முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் செயலாக்குதல்.
21. சமூக வலுவூட்டுகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுவரும் அஸ்வெசும பயனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுவத்துவதற்கு ரூபா. 250,000 வரை 8% வட்டி விகிதத்தின் கீழ் சமூக வலுவூட்டுகை என்ற பெயரில் விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.
22. சமுர்த்தி நிவாரண உதவியினைப் பெற்ற தற்போது அஸ்வெசும பயன்கள் கிடைக்காத குறைந்த வருமானத்தினைக் கொண்ட பயனாளிகளினை வலுவூட்டுவதற்கு விசேட நிகழ்ச்சித் திட்டமொன்று, “சமுர்த்தி ரன்பத” என்ற பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினூடாக செயலாக்குதல்.
23. சமுதாய அடிப்படையிலான தலைவர்கள், சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வெற்றிகரமான தொழில்முனைவோர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் தொடர்பில் இடம்பெறும் சில நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சமுர்த்தி சமுதாய ஹரசர என்ற பெயரில் பாராட்டு விழாவொன்றினை நடாத்துதல்.
24. சிப்தொர புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களின் பெற்றோர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கென மாதாந்தம் மாணவன் ஒருவனுக்கு ரூபா. 1,500 என்றவாறு 24 மாதக் காலப்பகுதிக்கு உயர் தரத்தினைத் தொடரும் 33,265 மாணவர்களுக்கு புலமைப்பரிசிலினை வழங்குதல்.